தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 12—11—55 | சனிக்கிழமை | இதழ் 22

இன்னும் வளரவில்லை - அதனால் எதிர்ப்பவர்கள் யாருமில்லை !

உள்ளம் நிறைந்த நிராசை - அது துள்ளித் துடிக்கும் வாழ்வாசை!

நினைத்து நினைத்து மகிழ்ந்தேன்;

நினைக்க நினைக்க இன்பம் பயத்தது அன்று. ஆனால் இன்றோ நினைவுக் கெட்டாத எல்லைக்கப்பாற் பட்டதாகிவிட்டது. உச்சாணிக் கொம்பில் இருக்கும் தேனை முடவன் அழகு பார்ப்பது போன்று சிந்தனைக்கே அப்பாற்பட்டதாகி விட்டது. நெஞ்சமோ எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கிறது. தறிகெட்டு, நிலைகெட்டுத் துடிக்கிறது. விம்முகிறது. வெதும்புகிறது வெந்தணல்போல் வேகுகிறது. வேடிக்கையா? வேதனையா?

ஆம்! வேதனை நிறைந்த வேடிக்கைதான்! காணும் கனவெல்லாம் நனவாகிப் பலிக்காதோ என்று கணம் கணம் எதிர்பார்த்த என் காதல், கனவே ஆகிவிட்டது ஏன்? ஏன்? எதற்காக? நான் பெண், அதுவும் பேதை என்பதால், ஆணின் உள்ளம் சமுதாயத்தைப் போன்று திடமில்லாததால் அதன் பயங்கரக் கொடிய சொரூபத்தை எதிர்த்துப் போராட இயலாததால், அபலை என்னை அலையவிட்டுச் சமுதாயத்தின்மூட சம்பிரதாயத்திற்குத் தலை வணங்கியதால், அநியாயத்தின் கையில் வகையாகச் சிக்குண்டு அணு அணுவாகத் துளைத்து அழிக்கப்படுகிறேன் நான்!

அன்று கூறிய ஆசை மொழிகள், பேசும் விழிகள், உணர்ச்சி பொங்கி உவகையுடன் வந்தணைத்த கரங்கள், உளங்குளிர உதிர்த்த சிரிப்பு இன்று எங்கே? அஃது அடுத்தொரு காரிகையை அணைத்தின்பம் அனுபவிக்கிறது. சமுதாய முட்டுக்கட்டைக்கு இடங்கொடுத்து, அதன் சட்டத்திற்கொப்ப, சாதி நங்கையாயிற்றே அவள்! அன்று என்னிடம் உதிர்த்த அதே தித்திக்கும் தேன் மொழிகள் அவளிடம்! உளுத்துப் போன சமுதாயத்தை உலுக்கிக் கேட்க எனக்குத் திடம் இருந்தும் காது கொடுத்துக் கேட்போர் யார்? கனவை நனவாக்குகின்றேன் என்று கூறிய கட்டழகன் இன்று எங்கே? பஞ்சணையில் வஞ்சி ஒருவனுடன் கொஞ்சிக் குலவுகின்றான்! கூறினாலோ, கூறுவர் 'விதி ஈதென்று' தயங்காமல்! இல்லையேல் 'கன்னி நீ துணிந்ததேன் காதலுக்கு, அஃது காவியத்திற்கும் ஓவியத்திற்கும் தான் ஒப்பும்' என்பார்.

காரிகை என் முகம் கண்டார் தன் முகந்திருப்பும் காரணந்தான் என்ன? களங்கம் நிரம்பியவள், உள்ளத்தால் ஒருவனை ஏற்றது அவள் குற்றம். காதலித்துக் காதலனால் கைவிடப்பட்டாள். உலகில் உத்தமியாய் உணர்ச்சியற்று வாழ்ந்தாலும் குற்றம் நிரம்பிய உருவம் எனக் கூறும் இவ்வுலகம்.

'தேனை மறந்திருக்கும் வண்டும்-ஒளிச் சிறப்பை மறந்து விட்ட பூவும் வானை மறந்திருக்கும் பயிரும் -இந்த வையத்தில் இருந்தால் அல்லவோ' மானிடரும் காதல் மறந்து காய்ந்த வாழ்வு வாழ்வர்? பருவமங்கை அவள், பாவம் பாவை அவள், எனக் கூறினால் போதுமா?

மலர்கள் அத்தனையும் கனியானால் அல்லவோ மாது நான் காணும் கனவும் பலித்திடும்? கபடம் நிறைந்த சமுதாயம் தீக்குழியில் இறக்கத் துடிதுடிக்கும் சம்பிரதாயம், அதற்கு அடிமையான மனித வர்க்கம்.

மாலை வேளை, கோலக்குயில் கூவும், குவிந்தமலர் விரியும், விரிந்த மலர் குவியும், வானம் முல்லைச்சிரிப்பு சிரிக்கும். முல்லையும் மறையும், தோன்றிடும் நிலவொளியும், தோன்றி மறையும் வெண்ணிலாவும் அத்தனை நாளும், அத்தனை வேளையும், அத்தான் என அன்பு மொழி பேசி அகங்குளிர்ந்து மெய்சிலிர்த்து, வாழ்வில் ஓர் திருநாள் வந்திடும் என்று இன்பக் கனவு கண்டநாள் எல்லாம் மாய்ந்து மடிந்ததுவோ? கணம் கணம் மேலெழும் கதிரோனும் கண்டான் இல்லை! கேட்டான் இல்லை! கொய்து மலர்சூடி, பாவை நான் பார்த்திருந்த நாள் சென்று ஏங்கித் தவிக்கின்றேன். எக்காலம் பயக்குமோ இன்பம்? பலிக்கும் இன்பத்'தைப் பகர்ந்திட்டானே ஒரு பாவை!' பாவம் பாவை அவள் என் செய்வாள்? ஆடவர், தம் அமுத மொழியில் வாழ வழி தேடிய அம்மங்கையும் மங்கையன்றோ? கன்னித்தமிழ் நாட்டில் பிறந்து, கற்புடனே வாழ்ந்தாலும் காதலது கொண்டுவிட்டால் காண்பதரிது காணும் இன்பம். காதலனும் கருத்து மிக்கவனாய், காதல் உள்ளம் அறிந்தவனாய் ஆற்றலுடன் இயற்கை செயற்கை யாவையும், காமத்தையும் கன்னியவள் கைப்பிடிக்கும் வரை எதிர்க்கும் ஆற்றலுற்றவனாய் இருப்பின் காரிகைகள் ஏன் கஷ்டப்படுவார்கள்?

'காலையில் உதித்த காதல்; சோலையில் செழித்த காதல் அல்லவடி நம் காதல்: உள்ளமது ஒன்றுபட்டு உதித்த உண்மையடி இக்காதல். உணர்ச்சி வசப்பட்டு உருக்குலைவதல்லவடி என்று உரைத்திட்ட காதலரும் சேர்ந்தாரே காரிகை நான் அல்லாமல் கனிவுடன் மற்றொருவனிடம். துன்பம் துடைக்கவும், இன்பம் பெருக்கவும் இருந்துன் வாழ்வை இனிக்கச் செய்வேன் என்றுரைத்த அவரும், எங்கு சென்றாரோ? எவளுடன் குலவுகின்றாரோ கண் ஒருத்தி பாலிருக்க. 'கருத்தொருத்தி பாலில்லையடி கண்ணே, நீ என் உயிர்' என்று காதருகில் உரைத்த காதலரும் இன்று கன்னி யாரிடமோ காணுகின்றார் இன்பம்!

செல்வர்க்கு இவ்வுலகம்!-தீண்டாமைப் பேயுலகம் பண்ணியது இக்கோலம்! பாவை நான் என் செய்வேன்? ஏழைக்கு இல்லை காதல், இழிகுலத்தார்க்கில்லை காதல் என்று உரைத்திட்டால் உணர்ச்சிதான் மடிந்திடுமோ ஓதுவீர் நற்றமிழோரே? கண்டதுதான் குற்றமா? காதல் கொண்டதுதான் குற்றமா? கற்றறிந்து தவறியது என்பதே காதல் கொள்வது என்பது போலும்! காதல் என்ற சொல்லிற்கு கானம் இழைத்தார் காணும் பொருள் யாது? சாதலே எனச் சாற்றிடுவேன். தவறு இது தரணியிலே காதல் வழி காண்பது. கருத்தொருமித்து காதல் கொண்டாலும் கனவென விட்டு விட்டு, இல்லையேல் பின்னாலே துன்பம் எனத் துணிந்து சொல்வேன் துல் இடையாள் நானும்.

இச்சகமதில் காரிகையர் காதல் பாதையில் காலடி வைத்தாலே கடினமதாகும் அவர் வாழ்க்கை - ஆசைக் கனவுகளோ அளவிற்கோடி கன்னியர்க்கு; நேசம் கொண்டாலும் நெஞ்சமது உடைந்திடும். பாவையர் தம் கனவு பலிக்கும் போல் பகர்ந்திடுவான். சமுதாயம் எதிர்த்தாலோ மறைந்திடுவான் மாயமாய். அவனும் புகன்றிடுவான் இது விதி, இது உன் தலைவிதி என. ஆண்களுடன் பழகினாலும் அளவுடனே பழகு. சபலபுத்தி உள்ளவர் சிலர், -நிலையற்ற நெஞ்சுடையவர் பலர். நிலைக்க வைப்பான் உன் வாழ்வை என்று நீ நினைத்தாலும் நின்அளவு நீள்அளவு ஆக்கிவிடாதே.

பேதையர்க்கு, பேரின்பம் சாவுதான் என சமுதாயத்தின் முடிவு போலும்! தாய், தந்தை, தமர் தனக்குத் தேர்ந்தெடுத்த கல்லுப் பிள்ளைதனை, தானே மகிழ்ந்து, மாலை சூட்டி, காணமுடியும் இன்பம் என்றால், காதல் வந்ததேன்? வாழ்ந்ததேன்? காவியங்கள் அதன் சிறப்பைத் தீட்டியதேன்? ஓவியங்கள் உரைப்பதேன்? மதியின் தண்ணொளியும் காரிருளின் கருமையும், பைந்தமிழ் அழகும் பிறந்ததும் அன்பிற்கே எனில் காரிகையர் காதல் கொள்வது மட்டும் கசப்பானசெய்தியாவதேன்?

நெஞ்சத்தின் குமுறல், கொந்தளிப்பு, கொதிப்பு, துடிதுடிப்பு ஆகியவற்றைக் கண்ட இன்பக் கனவின் காவிய ஓவியங்களை சமுதாய ஓமகுண்டத்தில் நெய்யாக வார்த்து விட்டார். சம்பிரதாய சடங்குகளை, விலங்குகளை, உடைத்தெறிந்து விட்டு, மலர்முகத்துடன், மாலையிட்டு உலகறிய ஊர் அறிய, உரிமை ஆக்கிச்செல்வார் என்ற எண்ணமும் சிறகடித்துப் பறக்கச் செய்துவிட்டார். அலை அலைக்கும் கடல் என அலைபாயும் அபலை உள்ளம்! எண்ணுவாரோ ஒருகணம்! எண்ணித்தான் பார்த்திட்டால் என்ன பதில் கிடைத்திடுமோ?

அனார்கலியும், லைலாமஜ்னுவும், அழியாக்காதல் ஓவியமாய்விளங்கிய விந்தைதான் என்ன! அவர் பட்ட துன்பம் காண மேதினியோர்க்கு இன்பம்! ஆஹா, இது கதை அருமையான கதை! காதல்! புனிதமான காதல்! எனப் புகன்று விட்டு, வீடு சென்று, தம் இல்லில் ஒருவர் அவ்வழி நடந்திட்டால் தகர்த்திடுவேன் என்றுரைக்கும் இவ்வுலகம்! சோககீதம் பாடிடும் அக்காதல் கதை பார்த்தாலும், கனியாது உள்ளம்! கதறியழுதாலும் கனியாது இதயம்!

உனைப்பிரிந்தால் உயிர்தரியேன் எனச் சொல்லி ஓர் உயிரால் பல உயிராக்கி வாழ்ந்திடுவார் சகமதில். சங்கடம் சூழ்ந்தாலும், சாதி பிரித்தாலும் நீதியில்லார் எதிர்த்தாலும் நீங்கேன் என்று கூறிடுவார். ஓடிடுவர் ஒருநாளில்.

ஆம்! சோகச் சூறாவளியில் சிக்கி வாடி, வதங்கி, துரும்பென நின்றுவிட்டேன். வண்டு வந்து வாடவேண்டும் என்றில்லை வையத்தோரே! சோக கீதம் இழைத்து சொல்லொணாத் துயருடன் வாடுகிறேன்.

"வாழ்வின் மதுத்துளி வடிந்து வீழ்ந்திட, வையம் முழுவதும் நகைத்திட, தேடிடும் இன்பமும் துன்பமதாய் வாழ்வில் விளக்கை நாடிடும் விட்டிலைப்போல், உள்ளம் நிறைந்த நிராசையுடன் வாடியமலராய் வாழ்கின்றேன்."

— மனோரமா

★ ★★★ ★

'மாய' மருமகன்!

உத்தரப்பிரதேச கவர்னர் திரு. கே. எம். முன்ஷி அன்றொரு நாள் பின்கண்ட தகவலைத் தெரிவித்தார்:—

"எனக்கு மகளே கிடையாது. ஆனால் யாரோ ஒரு மருமகன் மட்டும் ஏற்பட்டுவிட்டான். கொஞ்சம் பிரபலமாக இருப்பவர்களுடைய மருமகனாக நடிப்பது ஒருவிதப் பிழைப்பாக இருக்கிறது.

"ஒரு பஞ்சாபி இளைஞன் பிழைக்க வழியில்லாமல் திண்டாடினான். அவன் மூளையில் பிறந்தது ஒரு யுக்தி. என்னுடைய 'மருமகன்' என்று பலரிடம் கூறி ஏமாற்றிப் பணம் பறித்தான். அவனால் ஏமாற்றமடைந்த பலர் சந்தேகித்தனர். நான் இரண்டாவது மனைவியைக் கட்டிக்கொண்டபின் முதல் மனைவியை வீட்டை விட்டு விரட்டிவிட்டதாகவும், அவளுக்குப் பிறந்த பெண்ணையேதான் தான் கட்டியிருப்பதாகவும் அவன் கூறி அவர்களை நம்பவைத்தான்.

"நான் பார்த்தேயிராத என் 'மருமகனை'ப்பற்றிய தகவல் எனக்குத் தெரிந்ததும், போலீசுக்குத் தகவல் கொடுத்தேன். அதன்பின் அவன் தலை மறைவாகிவிட்டான். பலருக்குத் தெரிந்து பிரபலமாக இருப்பதே தொல்லையான காரியம்தான்"

★ ★★★ ★

''போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !''

எண்ணம்

மலர் 2 | 12-11-55 | இதழ் 22

மனப்பால் !

அந்நியன் விட்டுப்போன அரசியல் சட்டத்தின் ஓட்டை உடைசல்களைப் பூசி, மெழுகி, 'புதிய தயாரிப்பு-இது புனிதமான தயாரிப்பு' என்று பிரகடனப்படுத்தி, வலுக்கட்டாயத்தின்பேரில் பலதரப்பட்ட மக்களை அந்த அரசியல் சட்டப்புத்தகத்தினுள் திணித்து வைத்துக்கொண்டிருக்கும் காங்கிரஸ் ஏகாதிபத்திய சர்க்கார், தன்னுடைய அடக்குமுறையையும், அரசோச்சும் உரிமையையும் 'சிரஞ்சீவி'யாக்கிக்கொள்ள எத்தனிக்கிறது என்பது, மந்திரிகளின் சமீபத்திய பேச்சுக்களிலிருந்து எதிரொலிக்கிறது. நாள் பார்த்து, நட்சத்திரம் பார்த்து, (தமிழகத்தில் சாவு வீட்டில் தாலி வாங்குகிற நேரத்தில்) 'காங்கிரஸ் நாயன்மார்கள்' சுதந்தர சாசனத்தைப் பெற்றுக்கொண்டார்கள். சாஸ்திர சம்பிரதாயங்களிலே உடும்புப் பிடியாக இருக்கிறவர்களுக்கு அந்த 1947- ஆகஸ்டு 15-நல்ல கசையடி கொடுத்தது. சுதந்தர அரசுகளின் பால்யகாலத்தில், சாஸ்திரத்தில் மோகம் வைத்து அதனுல் ஏமாற்றமடைந்த சர்க்கார் காங்கிரஸ் சர்க்கார் ஒன்றுதான். ஏமாற்றத்திலே ஆட்சியைத் தொடங்கி, ஏக்கத்துடனேயே காலத்தைக் கழித்துவரும் காங்கிரஸ் கட்சி, நாள்தோறும் புதுப்புது ஏமாற்றங்களுக்கே வித்தூன்றி வருகிறது. 'ராட்டினம் சுற்றுங்கள்; அது ராஜ்ஜியத்தைக் காப்பாற்றும்' என்று மக்கள் கட்சியாக இருந்த காலத்தில் உபதேசித்து வந்தவர்கள்,எட்டாண்டு காலம் ரணகளத்தையே ராஜபாட்டையாக்கிக் கொண்டிருக்கிருர்கள், உரிமைக்கு வாதிட்டவர்களின் உதிரத்தைக் குடித்து, அவர்களது எலும்புத்துண்டுகளை தங்களுக்கு உரமாக்கிக் கொண்டிருக்கிருர்கள். ஆனுலும் அந்த ஆதிக்க வெறி, அடக்கியாளும் வேட்கை இன்னும் காங்கிரஸ் கட்சிக்கு அணுவளவேனும் குறையவில்லை. நாட்டின் நலனுக்காக, சுதந்தர வாழ்வுக்காக வெள்ளையனை விரட்டுகிருேம் என்று மற்றவர்களின் ஒத்துழைப்புக் கோரியவர்கள், காலப்போக்கில், வெள்ளையனை விரட்டிவிட்டு, அந்த சிம்மாசனத்திலே காங்கிரஸ் கட்சியை அமர்த்துவதற்காகத்தான் சுதந்தரப் போராட்டம் நடத்திஞேம் என்று பதில் கூறும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

அண்மையில் மதுரைப் பகுதியில் நகரசபைத் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்துகொண்ட சென்னை முதலமைச்சர் காமராசர் ஒரு தகவலைத் துணிந்து வெளியிட்டிருக்கிருர். ''அடுத்த பொதுத்தேர்தலில் காங்கிரசுக்கு எதிர்ப்பே இல்லாமல் செய்துவிட வேண்டும்'' என்று காமராசர், இந்த நாட்டுமக்களை மண் பதுமைகள் என்று எண்ணிக்கொண்டு கூறியிருக்கிருர் இவ்வாறு, காங்கிரசுக்கு எதிர்ப்பு இல்லாமல் செய்துவிட வேண்டுமாம்! எட்டாண்டுக் காலத்தில், ஏற்ற நல் காரியங்களைச் செய்து நாட்டுமக்களின் அன்பை, ஆதரவைப் பெறமுடியாத கட்சிக்கு, இன்னும் சில மாத காலத் தவணைக்குள் எதிர்ப்பில்லாமல் செய்துவிடவேண்டுமாம்! ''காங்கிரசுக்கு தென்னுட்டில் மட்டும்தான் எதிர்ப்பிருக்கிறது; அதுவும் குறிப்பிட்ட ஒரு கட்சிக்காரர்கள்தான் காங்கிரஸ் கட்சியைப் பலமாக எதிர்க்கிருர்கள்'' என்று பேசிய காலம் போய், திராவிட இயக்கத்தின் தென்னுட்டுக்குரல், தென்னுட்டு மக்கள் குரலாக உருவெடுத்த பின்பு,பிறந்தகமாம் வடநாட்டில் பிரதமர் ஜவகருக்கே பலமான எதிர்ப்பு முளைத்து எங்கணும் கருப்புக்கொடி பறந்திடத் துணிந்த பின்பு, வளர்ந்து வரும் மாணவர் படையின் சுடுமூச்சுக்குக் காங்கிரஸ் கருகிடத் தொடங்கிய பின்பு, காமராசர் சொல்லுகிருர், ''அடுத்து வரும் பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிர்ப்பில்லாமல் செய்துவிட வேண்டும்'' என்பதாக.

நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களில், குறிப்பிட்ட புள்ளிகளெல்லாம் குப்புற வீழ்ந்தார்கள்; வெற்றி நமக்குத்தான் என்று நம்பி, முன்கூட்டியே பூக்கடைக்குச் சொல்லியனுப்பிய மாட்டுப்பெட்டிக்காரர்களில் எத்தனையோ பேர் ஓட்டுப்பெட்டி எண்ணப்பட்டவுடன் ஓடிய திக்குத் தெரியவில்லை; ஆனுல் காமராசர் கனவு காண்கிருர், காங்கிரசுக்கு எதிர்ப்பில்லாமல் செய்துவிட வேண்டுமென்று !

மாநிலப் புனரமைப்புக்குழு ஏன் நியமிக்கப்பட்டது என்றே ஆள வந்தவர்களுக்குப் புரியவில்லை. ஏதோ பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காகவும், நிர்வாகத் தொல்லையைக் குறைத்துக்கொள்வதற்காகவும்நியமிக்கப்பட்டதுபோல அந்தக் குழு தனது தீர்ப்பைத் தெரிவித்திருக்கிறது. அதை எதிர்த்து நாடெங்கும் கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டன. அந்தக் குழுவின் தீர்ப்பு தெருத்தெருவாக வைத்து தீயிடப்பட்டன வடநாட்டில். சென்னை ராஜ்யம் 'தமிழ்நாடு' என்று இருக்க வேண்டிய அவசியமில்லை என்கிறது தமிழ்நாட்டு சர்க்கார். ஆனுலும் காமராசர் அடுத்த பொதுத்தேர்தலில் காங்கிரசுக்கு எதிர்ப்பு இல்லாமல் செய்துவிடவேண்டும் என்கிருர். எப்படி முடியும்? காமராசருடைய வாக்கியத்தை அப்படியே வைத்து ஆராய்ந்தால் வேறு விதமான பொருள் கொள்வதற்கு வழி இருக்கிறது. '' எதிர்ப்பில்லாமல் செய்துவிட வேண்டும்''-இதிலே மறைந்து கிடக்கும் பொருள், ''காங்கிரஸ் கட்சி நல்ல கட்சி; எனவே, அந்தக் கட்சிக்கு எதிர்ப்பு இருக்கக்கூடாது'' என்று எதிர்க்கட்சிக்காரர்கள் போட்டி போடாது இருந்துவிடும்படி கட்சியைக் கட்டிக்காக்க வேண்டும், அல்லது எதிர்ப்போரை எப்படியேனும் (களபதிகளாகி அடிபிடி ஆள், அம்பு, துணைகொண்டு) எதிர்க்காமல் செய்துவிட வேண்டும். இந்த இரண்டு பொருள்கள்தான் காமராசருடைய பேச்சுக்கு நமக்குக் கிடைப்பவை. இதில் முன்னது காங்கிரசுக்கு இனி எந்த வகையிலேயும் கிடைக்க வழியில்லை, ஏனென்ருல் கழுதை நின்ருலும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகிற காலம் போய் 'கனம்'கள் நின்ருலும் ஓட்டுப் பெறமுடியாத காலம் இந்தக் காலம். இரண்டாவது வழி ஆதிக்கவழி- அந்தவழி காங்கிரசுக்கே சொந்தவழி. நாகரிகமுள்ளோர் கையாளக்கூசும் வழி. அந்த வழியைத்தான் காமராசர் பின்பற்றப் போகிருரா ? நற்றிருண்டின் துணைகொண்டு பொற்குன்றில் ஏற்றிவைக்கப்பட்டவர் என்றெல்லாம் புகழப்படுபவர், அத்தகு இழிசெயலையா பின்பற்றுவார் ! பின் எந்த வழியில் காங்கிரசுக்கு எதிர்ப்பில்லாமல் செய்துவிட வேண்டும் என்று காமராசர் சொல்லுகிருர்? கடைசிக் காலத்தில் காமராசர் ஏன் இவ்வாறு மனப்பால் குடிக்கவேண்டும்? பெரியார் தன்னை ஆதரிப்பதாகச் சொல்கிருர் ; கம்யூனிஸ்டுக் கட்சிக்கோ செல்வாக்கில்லை; தி. மு. கழகமோ தேர்தலில் கலந்துகொள்ள இன்னும் முடிவுகட்டவில்லை; ஆகவே, காங்கிரசுக்கு எதிர்ப்பிருக்காது என்ற எண்ணம்தான் காமராசரை இவ்வாறு பேசத்தூண்டியது. அவருக்கு, கடந்த வாரத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் திருவொற்றியூரில் பேசியிருப்பதை நினைவுறுத்தி விடுகிருேம்.

'' தேர்தலில் ஈடுபடவேண்டும் என்று மக்கள் கருத்தறிவித்தாலும் அதற்கான பணவசதிகள் முதலியவற்றை முழுவதுமாக தி. மு. கழகம் பெற்றிருக்கிறது என்பதல்ல; தேவையானுல் சோஷலிஸ்டுகள் கம்யூனிஸ்டுகள் ஆகியோருடன்கூடக் கூட்டுச் சேர்ந்து, தி. மு. கழகம் போட்டியிடக்கூடும். எனவே காமராசர் 'காங்கிரசுக்கு எதிர்ப்பே இல்லாது செய்துவிடலாம்' என்று கனவு காணத் தேவையில்லை. வரப்போகும் தேர்தலில் காங்கிரசை எதிர்க்காமல் விடப்போவதில்லை என்பதைமட்டும் கூற விரும்புகிறேன்''—இது அண்ணு அவர்கள் விடுத்திருக்கும் எச்சரிக்கை.எந்தச் சக்தியை எப்போது பயன்படுத்த வேண்டுமென்ற அரசியல் யூகம் தெரிந்த தென்னுட்டுத் தலைவனின் எச்சரிக்கையை காமராசர் உணர்ந்துகொள்ளவேண்டும். இது சத்தியமூர்த்தி காலமல்ல; பத்திய மிருந்து பட்டினி கிடந்து காங்கிரஸ் கட்சியை மக்கள் புரிந்துகொண்ட காலம்.

ஆசிரியரின் இலங்கைப் பயணம்

ஆசிரியர் கண்ணதாசன் 7-11-55 காலை 11-மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, அன்று பிற்பகலில் இலங்கை சேர்ந்தார். மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு ஏராளமான கழகத் தோழர்களும், படிப்பகம், மன்றத் தோழர்களும் வந்திருந்து ஆசிரியரை அனுப்பிவைத்தார்கள். தோழர். சேலம் பி. பி. பத்மநாபன் கண்ணதாசனுக்கு கைத்தறி ஆடை அணிவித்தார் தோழர் ஜி. நாகராஜன், துரைராஜ் மலர்மாலை சூட்டினர். சென்னை சூளை சவுந்திரபாண்டியன் நினைவுப்படிப்பகம், பேராசிரியர் சுந்தரனுர் நாடகக் கலைக்கழகம் ஆகியவற்றின் சார்பாக கண்ணதாசனுக்கு மலர்மாலைகள் சூட்டப்பட்டன'

திருவாளர்கள் ஏ. எல். எஸ். சீனிவாசன், இராமனுதன் பிக்சர்ஸ் இராமனுதன், டைரக்டர் சாட்சி, காரைக்குடி இராம. சுப்பையா, எஸ். எஸ். தென்னரசு, ஜி. நாகராஜன், பாரதி பிரிண்டர்ஸ் ராமசாமி, பாபு, ராமனுதன், அழகு மாணிக்கம் '' கல்கண்டு '' ஆசிரியர் தமிழ்வாணன், க. நாராயணன், தமிழ்ப்பித்தன், சி. என். சாமுவேல், எஸ். ஏ. ஜி. சாமி, மு. மாசிலாமணி, தாமரைச்செல்வன், சந்திரமோகன், அழகரசன், துரைராஜ், ராகவலு, ஏழுமலை, பச்சை, ஆகியோரும் மற்றும் கண்ணதாசன் குடும்பத்தினரும் விமானநிலையத்திற்கு வந்திருந்தனர்.

சிலம்பு வழங்கும் செல்வம்

இராசன்

நாடகக்கலை எங்கெங்கே எவ்வாறு தோன்றிற்று? எப்படி வளர்ந்தது? பல நாடுகளிலும் அதன் தோற்ற வளர்ச்சி வரலாறுகளை அறிஞர் ஆராய்ந்து வருகின்றனர். உலக அடிப்படையில் நாடக வரலாற்றை அறிய அவர்கள் முடிவுகள் மிகவும் பயன்படுவன.

பல நாடுகளில் நாடகப் பண்புகளின் தோற்ற வளர்ச்சிகளைச் சமய வினை முறைகள், விழாக்கள் சுட்டிக் காட்டுகின்றன. இக்காரணத்தால் நாடகம் சமயத் துறையிலிருந்தே தோன்றி வளர்ந்தது என்று சிலர் கூறத் துணிகின்றனர். ஆனுல், இது முற்றிலும் சரியன்று. ஏனென்ருல், நாடகம் ஒரு கலை. மக்கள் வாழ்க்கையோடு ஒட்டிய கலை. இன்றுகூட அதன் வளர்ச்சியை வாழ்க்கைத் துறையிலேயே நாம் காணமுடியும். சமயத்துறையில் மட்டுமல்ல. இலக்கியத் துறையில் கூட நாம் அதன் உயிர் வளர்ச்சியை முற்றிலும் காணமுடியாது. அதன் நிழலைமட்டுமே காண்கிருேம்.

இக்காரணத்தினுலேயே நாடக மேடை ஏருதவர், மேடை அனுபவம் இல்லாதவர் எழுதும் நாடகம் நாடகக் காப்பியமாக மட்டுமே இருக்கும். மேடையில் இயங்கும் உயிருள்ள வளர்ச்சிப் பண்புள்ள நாடகமாயிராது.

மிகப்பல நாடுகளில் பழைமையான நாடக இயல்பை ஆராய்ந்தவர்கள் அது நாட்டியத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையதென்றும், நாட்டியத்திலிருந்தே தோன்றி, அதனுடன் நெடுநாள் இயைந்தே இயங்கிற்றென்றும் கூறுகின்றனர். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் நாடகம், நாட்டியம் என்ற சொற்கள் நெருங்கிய சொல் தொடர்பும் பொருள் தொடர்பும் உடையன. பல புலவர்கள் இன்றளவும் நாடகம் என்ற சொல்லை நாட்டியம் என்ற பொருளில் வழங்கியதும் உண்டு.

உலக நாடகப் பண்பின் பழமை

சமயத்துறையில் பல மொழி மூலங்கள் எழுத்து மூலங்கள், புதைவடிவச் சின்னங்கள் ஆகியவை உலக நாடகப் பண்பின் பழமையைச் சுட்டிக் காட்டுகின்றன.

புராணங்களில் யமன் உயிர் கொண்டேகும் தெய்வம் மட்டுமல்ல. ஆரியரின் அறக்கடவுள் அல்லது தரும தேவதை அவனே. இருக்கு வேதத்தில் அவன், காதல் கதை ஒரு உரையாடல் வடிவில் காட்சியளிக்கிறது. யமன்-யமி இரட்டைப் பிள்ளைகள். அண்ணன் தங்கையர். ஆனுல், யமன் யமியையே காதலிக்கிருன். யமி இத்தொடர்பு தகாது என்று கூறி ஊடுகிருள். கதை முடிவை இருக்கு வேதம் தெளிவாக்கவில்லை. ஆனுல், உரையாடலின் போக்கும் பிற்காலப் புராணமும் யமன் காதல் வெற்றியையே தெரிவிக்கின்றன. ஆரியர் நீதிக் கடவுள் தங்கையையே மணந்து கொண்டு வாழ்கிருர்.

பல சமஸ்கிருதவாணர் சமஸ்கிருத நாடகத்தின் கருமூலத்தை இந்த இருக்குவேத உரையாடலில் காண்கின்றனர்.

கிரிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் விவிலிய நூலின் பழைய ஏற்பாடு பொதுவான திருநூல் ஆகும். அதில் யோபுவின் ஏடு நாடகப் பண்பு கனிந்த கதை கூறுகின்றது. நன்மகனுகிய யோபுவின் உயர்வைக் காட்ட இறைவன் அவனுக்குத் துன்பத்தின்மேல் துன்பம் அனுப்புகிருர். துன்பத்தின் காரணம் அவன் பழம் பழிகளே என்றும், கடவுளிடம் மன்னிப்புக் கோரும்படியும் சில அறிஞர் யோபுவுடன் வாதிடுகின்றனர். இறுதியில் இறைவனே அவன் துன்பங்கள் அகற்றுகிருர்.

இருக்குவேத உரையாடலும் விவிலியக் கதையும் மூவாயிர ஆண்டு பழமையுடையன. இவற்றிலும் ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட ஒரு நாடகப் பண்பை மொகஞ்சதரோ முத்திரை ஒன்று காட்டுகிறது. இதில் பல விலங்குகளின் நடுவே, கொம்புகளுடன் சிவபெருமான் போன்ற தெய்வ உருவம் காட்சியளிக்கிறது. சிவபெருமான் பசுபதி, எல்லா உயிர்கட்கும் இறைவன் என்ற சைவக் கருத்தை இக்காலச் சைவர் கண்டு வியக்கும் வகையில் இது புதுவகை விளக்கம் தருகிறது.

இம்மூன்றும் மனித நாகரிகத்தில் நாடகப் பண்பின் பழமையைச் சுட்டிக்காட்டுகின்றன வேயல்லாமல், அதன் தோற்ற வளர்ச்சிகளை விளக்கவில்லை. அவற்றை விளக்க உதவும் துறை, விழாக்களே. ஆனுல், விழாக்கள் சமயத்துறை சார்ந்தவைமட்டுமல்ல, சமுதாயத் துறையையும் சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

விழாக்கள் காட்டும் நாடகக்கலை வளர்ச்சி

இஸ்லாமியரின் ஒரு கிளையினரான ஷியாக்களின் பண்டிகை ஒன்று 'ஆடு-புலி' போராட்டமாக இயங்குகிறது. பாரசீகத்திலும் சிந்து கங்கை வெளியிலும் தென்னுட்டிலும் இப்பண்டிகை விழா ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது. இதில் 'ஆடு' அமைந்த இனிய பண்புகளை உடைய நபிகள் நாயகத்தின் மருமகனை 'அலி'யையும் அவர் பெயரன் ஹுசேனையும், 'புலிகள்' அவரை மாய்த்த அவர் எதிரிகளையும் குறிப்பவை. இம்முறையில் முன்னுட்களில் நடிக்கப்பட்ட சமய நாடக ஊர்வலம் இன்று நாடகப் பண்பு தேய்ந்து, வெறும் வேடிக்கை விழா ஆகியுள்ளது.

தமிழக விழாக்களும் புராண கதைகளின் நாடக விளக்கமாகத் தொடங்கியவையே. சுந்தரமூர்த்தி நாயனருக்குச்சிவபிரான் தூதுசென்றது. மாணிக்கவாசகருக்காக அவர் மண் சுமந்து அடிபட்டது ஆகிய காட்சிகள் விழாக்களில் நாடகப் பண்பு மிகுதி கெடாமல் இன்றும் நடிக்கப்பட்டு வருவது காணலாம். உயிருள்ள நடிகருக்குப் பதிலாக, சில சமயம் புரோகிதரும் சில சமயம் உருவங்களும் இங்கே பயன்படுத்தப்படுகின்றன.

கத்தோலிக்க விழாக்களில் நாடகப் பண்பு இன்னும் முனைப்பாகத் தெரிகின்றது. ஊர்வலமாக வரும் ஒவ்வொரு உருவமும் இன்னும் இயேசுவின் வாழ்வில் ஒரு காட்சியை நினைவூட்டவல்லது. ஆனுல் முன்னுட்களில் உருவங்களை இழுத்துச் சென்ற சகடங்கள் உருண்டோடும் மேடைகளாய் இருந்தனஎன்று அறிகிருேம். உருவங்கள் இன்று உயிரற்ற பொம்மைகளாய்விட்டன. பல நூற்ருண்டுகளுக்குமுன் அவற்றின் இடத்தில் உயிருடைய நடிக நடிகையர் நடித்திருந்தனர் என்று கூறுகிருேம்.

ஆங்கில நாடக மரபு

விழாக்காட்சி நாடகங்களை ஆங்கிலத்தில் இயேசு வாழ்க்கை நாடகங்களாகிய மறை நாடகங்கள், சமயத் திருத்தொண்டர் கதைகளாகிய திரு விளையாடல் நாடகங்கள், ஒழுக்கப்பண்பு நாடகங்கள், நொடிக் கதை நாடகங்கள் என்றபடிகளாக வகுத்துக் காட்டுவர்- மன்ற நாடகங்கள் முதலில் கோயில்களிலும் பின் ஊர்வலக் காட்சிகளிலும் காட்டப்பட்டன. கோயில் குருக்கள் நாளடைவில் இவற்றின் பொறுப்பை வணிகக் குழுக்கள் அல்லது சாத்துக்களிடம் விட்டனர். மக்கள் ஆர்வமறிந்து அவர்கள் அதைப் படிப்படியாகத் திருவிளையாடல் நாடகங்கள், ஒழுக்கப் பண்பு நாடகங்கள், நொடிக்கதை நாடகங்கள் என்ற முறையில்வளர்த்தார்கள். இவையே மக்கட் கலையாக வளர்ந்து இலக்கிய வடிவடைந்து ஷேக்ஸ்பியர் கால நாடகமாக 1580க்குள் வளர்ச்சியடைந்தன என்று அறிகிருேம்.

ஷேக்ஸ்பியர் கால ஆங்கில நாடகம் இங்கிலாந்தில் இயற்கையாக வளர்ந்த கலையானுலும், அதற்குக் கடைசிக் கட்டத்தில் முன்மாதிரியாக உதவியவை இலத்தீன், கிரேக்க நாடகங்களே. இவை ஷேக்ஸ்பியர் காலத்துக்கு இரண்டாயிர ஆண்டுகளுக்கு முற்பட்டவை

கிரேக்க மரபு

கிரேக்க நாட்டில் நாடகம் ஒரு கலையாய் இயங்கவில்லை. இரண்டு கலைகளாய் இயங்கின என்று அறிகிருேம். இரண்டும் இரண்டு தெய்வங்களின் திருவிழாக்களை ஒட்டி நடைபெற்றன என்றும் தெரியவருகிறது.

துன்பியல் நாடகம் டயோனிஷஸ் என்ற மலைத் தெய்வத்தின் விழாவில் நடைபெற்றது. இத்தெய்வம் நம்நாட்டுச் சிவபிரானை நினைவூட்டுவது. சிவனையும்காளியையும்போல அது உக்கிரமான தெய்வம். அதன் தலை ஒரு ஆட்டுத்தலை. விழாவில் புரோகிதர் ஆட்டுத்தலை யணிந்து டயோனிஷஸாக நடித்து, அவர் திருவிளையாடல்களைப் பாட்டாலும் ஆட்டத்தாலும் நடிப்பாலும் விளக்கினர். புரோகிதர் ஆட்டுத் தலையணிந்து நடித்ததாலேயே அது கிரேக்கமொழியில் ஆட்டு நாடகம் என்ற பெயரை அடைந்தது.

இதில் வீரம், கோபம், சோகம் ஆகிய உணர்ச்சிகள் இடம்பெற்றன. தேவரும் வீரரும் மட்டுமே காட்சி தந்தனர். இன்பம், நகைச்சுவை, சமுதாய வாழ்க்கைப் பின்னணி ஆகியவை இடம்பெறவில்லை.

இன்பியல் நாடகம் பாக்கஸ் அல்லது அப்போலோ என்ற தெய்வத்தின் விழாவில் நடைபெற்றது. இத்

(11-ம் பக்கம்)

அதுமட்டும் இல்லை!

தருமபுரம் ஆதீனத்திலிருந்து குறளின் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பகுதிகளையும் மூன்று தனித்தனி நூல்களாக உரையோடு வெளியிட்டிருக்கிருர்கள். அதிலே அறத்துப்பால் பகுதி தனக்கு வேண்டுமென்று சென்னையிலிருந்து ஒரு பேராசிரியர் ஆதீனத்திற்குக் கடிதம் எழுதியிருந்தாராம். அதற்கு ஆதீனத்திலிருந்து ரத்தினச் சுருக்கமாக வந்த பதில் இது;—

''இங்கே அறம் கிடையாது. பொருளும் காமமும் உண்டு''

—செயலாளர்

ஆதீனம்.

பன்மொழிப்புலவர்

கா.அப்பாதுரை. M.A.L.T

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதோரு கருத்தைஎன(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 | 5-11-55 | இதழ் 21

வேலூர் சூளுரை !

தென்னிந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறவர்கள் யார் ?

வெள்ளையர் நாட்டைச் சேர்ந்த ராபர்ட் கிளைவா ? பிரான்சு நாட்டைச் சேர்ந்த தூப்ளேயா ? என்ற ஐயப்பாடு, தென்னாட்டு மக்களின் உள்ளங்களில் அடிக்கடி தோன்றித் தோன்றி மறைந்த பதினெட்டாம் நூற்றாண்டில், சரித்திரத்தின் கீறல் பட்ட நகரங்களிலே வேலூர் ஒன்றாகும். வணிகர் வேடமிட்டு, பின் வையகம் ஆளத் திட்டமிட்ட வேற்றூர் இருவருக்கு தாயக்கட்டமாக்கப்பட்ட வேலைநகர் வரலாற்றுக் காட்சிகளை, படித்தறிந்தோர் மறப்பதற்கில்லை முதல்நாள், கோட்டையைக் கைப்பற்றி கொடி கட்டிப் பறக்கவிட்டவர்கள், மறுநாள் அந்தக் கோட்டையையே கோட்டைவிட்டு ஓட்டம்பிடித்த நகைப்புக்குரிய நிகழ்ச்சிகள் பலவற்றை வேலைநகர் சந்தித்திருக்கிறது. காலையிலே படிந்த கிளைவின் காலடியை, நவாபுகளின் துணைகொண்டு மாலையிலே தூப்ளே படை கிளப்பிய புழுதிக்காற்று மறைத்திருக்கிறது-அங்கே! இவ்வாறு தினம் தினம் புதுப்புதுக் காட்சி தந்த வேலூரை, அண்மையிலே, படைகளின் துணைகொண்டு பவனிவந்த பண்டிதநேரு ஒரு புதிய அத்தியாயத்தில் இணைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். ஆனால், இருநூறு ஆண்டுகளுக்கு முந்திய வேலூர் நிகழ்ச்சிகளுக்கும், இன்றைய வேலூர் நிகழ்ச்சிக்கும் நிறைய வேறுபாடுண்டு அன்றைய வேலூர், அந்நியர் இருவரின் அட்டகாசங்களுக்கு அரங்கமாகத் திகழ்ந்தது; ஆனால் இன்றைய வேலூர், அந்நியர் தலைவனுக்கு அறைகூவல் விட்ட அலகாபாத் பண்டிதருக்குத் தன்னுடைய எழுச்சியை உணர்த்தி, அரசியல் நாகரிகத்தை வற்புறுத்தி, ஜனநாயகத்தை நிலைநாட்டிவிட்டது.

சென்ற திங்கள், முதல் வாரத்தில் தென்னாட்டில் சுற்றுலா வந்த ஜவகர்லால் நேரு அவர்கள் ஊருக்கு ஒருவகைச் 'சொற்பொழிவை' நிகழ்த்திவிட்டு, இறுதியாக வேலூரில் தனது 'சுபாவ' த்தைக் காட்டிவிட்டுப்போனது அனைவரும் அறிந்ததே "நேருஜியின் வேலூர் பேச்சைப் பார்த்தேளா ? ப்ரமாதம் ! வெகு ப்ரமாதம் !" என்று அந்தப் 'புறத்'துக் காரர்களிலிருந்து அவர்களையொட்டி வாழ்க்கை நடத்தும் நமது சொந்தப் 'புறத்'துக்காரர்கள் வரை பண்டிதரின் வேலூர் சூளுரையை நினைத்து நினைத்துப் பூரித்தார்கள் - வெட்டி விருப்புப் பேசினார்கள்.

அங்கமிழந்து (பாகிஸ்தான் பிரிந்தது) பங்கமடைந்துள்ள பாரத மாதாவின் செல்வத் திருமக்கள், சிந்தை மகிழ்ந்து சுய நினைவு செத்துப் போகும் வகையில் பண்டிதர் அப்படி என்ன சூளுரை பகன்றுவிட்டார் வேலூரில் ! களம் அமைப்போம், கைவரிசை பார்ப்போம்-என்று கூறிவிடவில்லை. வாளெடுப்போம் - வெற்றிகொள்வோர் கொற்றவர் கொலு மண்டபம் புகட்டும்-என்றும் சொல்லிவிடவில்லை. வேறு என்ன சொன்னார் ? மக்கள் சக்தி தன் பக்கமிருக்கிறது என்பதையாவது காட்டிக் கொள்ள அவருக்குத் துணிவு பிறந்ததா ? பிரச்சினையை வாக்கெடுப்புக்கு விட்டுப் பார்ப்போம் என்றாவது அறைகூவல் விடுத்தாரா ? நாட்டைத் துண்டாட விரும்புவோரை இனி விட்டு வைக்கமாட்டேன். என் வசமிருக்கும் ரத, கஜ, துரக, பதாதிகளை ஏவிவிட்டு படுசூரணமாக்கிடச் செய்வேன் என்றல்லவா அந்தக் 'கதர்க்குல்லா ஹிட்லர்' சொன்னார். படை பலத்தை நம்பிப் பாராண்ட காலம், மக்கி மடிந்து, அந்தக் காலக்கொடுமைகளெல்லாம், எழுத்தையும் சாசனங்களையும் முன்வைத்து பரிபாலனம் செய்யும் இன்றைய பீடத்திற்கு உரமாக அமைந்துவிட்ட ஜனநாயகயுகத்தில் 'நேரு பெருமான்' இப்படிப் பேசிவிட்டாரே என்று நல்லாட்சியின் இலக்கணம் தெரிந்தோர் பொருமினர். ஆனால் அந்தப் பொருமல் சாதாரண மக்கள் மத்தியிலேயும் பூத்துப் பரிகாரம் தேட முனைந்துவிட்டது.

தென்னாட்டைப் பிரிக்கத் துடிக்கும் திராவிட இயக்கத்தை ஒழித்துக் கட்டத் தயங்கமாட்டேன்-என்று நேரு எங்கு கர்ஜித்தாரோ, அதே நகரத்தில், அதே நேருப் பண்டிதருடைய வாய்வீச்சை வேலூர் மக்கள் காலிலே போட்டு மிதித்துத் துவைத்துத் தூக்கி எறிந்துவிட்டார்கள். "படையை ஏவுவதுபிறகு இருக்கட்டும்,முதலில் விடைபெற்றுச்செல்லட்டும் உமது ஆட்சி" என்று காங்கிரஸ் கட்சியின் முகத்திலே அழிக்கமுடியாத கறுந்தழும்பை ஏற்படுத்திவிட்டார்கள். நகரசபைத் தேர்தலிலே வேலூர் மக்கள் அளித்த தீர்ப்பு, "யார் மீது, யார் படையை ஏவுவது ? உம்மால் ஏவப்படும் படை எம்மால் வளர்க்கப்பட்ட படை என்பதை மறந்தீரோ ?" என்று பண்டிதரைப் பார்த்து இடித்துரைப்பதுபோல அமைந்திருக்கிறது.

வேலூரில் நகரசபைத் தேர்தலுக்குப் போட்டியிட்ட 26 காங்கிரஸ் உறுப்பினர்களில் ஏழு பேர்தான் வெற்றி பெற்றிருக்கின்றனர். மொத்தத்தில் பத்து ஸ்தானங்களுக்கு காங்கிரஸின் பேரால் அபேட்சர்களே நிறுத்தப்படவில்லை. தலைவர் சவால் விட்டார். தொண்டர்கள் மண் கவ்வினார்கள். 'அகில உலக ஜோதி'யின் ஆணவம் ஒழிந்தது. ஆனாலும், மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக-காங்கிரசை முறியடித்த மக்களின் விருப்பத்திற்கு எதிராக;தென்னாட்டை தன் கைக்குள் வைத்துச் சுருட்டிக் கொண்டிருக்கிறார். இதைத்தான் சென்ற வாரம் குடந்தைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், "தமிழ்நாட்டுக் கண்ணகி தன் வழக்கைப் பாண்டியனிடம் எடுத்துரைத்தாள். குற்றத்தை உணர்ந்த பாண்டியன் யானோ அரசன் ? யானே கள்வன் ! என்று கூவி உயிர் நீத்தான். நாமும் நம் வழக்கை டில்லி நோக்கி எடுத்துரைக்கிறோம். ஆயினும் பாண்டியனின் பெருந்தன்மையை நாம் நேருவிடம் காணுவதற்கில்லை." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வேலூர் மக்கள் வழக்குரைத்து வெற்றி கண்டார்கள், ஆனால், நேரு பண்டிதர் இன்னும் மக்கள் குரலுக்குச் செவிசாய்க்கவில்லை. யானோ அரசன் ? யானே கள்வன் ! என்று, பாண்டியனைப்போல் தவறை உணர்ந்து கதறும் காலம் இதுவல்ல என்றாலும் அபகரித்து வைத்திருக்கும் நாட்டையாவது நாகரிகமான முறையிலே தந்துவிடலாம். அதுதான் முறை.

மான நஷ்டம்!

ஒரு ஆசாமி ஒரு ஓட்டைக் காரை வேகமாக ஓட்டிக் கொண்டு வந்தார். காரின் முன் பகுதி திறந்து கிடந்தது. ரேடியேட்டரிலிருந்து தண்ணீர் கொதித்துக் கொதித்து வெளியே வந்து கொண்டிருந்தது. அலங்கோலமாக இருந்த காரை ஒரு மரத்து நிழலில் கொண்டுவந்து நிறுத்தினார் அந்த ஆசாமி. வழியிலே போய்க்கொண்டிருந்த ஒருவரைக் கூப்பிட்டு, "ஐயா, இந்தக் காரைக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள். அதற்குக் கூலி வேண்டுமானாலும் கொடுத்துவிடுகிறேன். கொஞ்சம் டெலிபோன் செய்துவிட்டுவருகிறேன்" என்றார். வழிப்போக்கர் சம்மதித்தார். ஆசாமி போய் டெலிபோன் செய்துவிட்டு ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்தார். வந்ததும் கூலி எவ்வளவு என்று கேட்டார். இருநூறு ரூபாய் என்றார் வழிப்போக்கர்.

"என்ன இது? இரண்டு ரூபாய் தானே காவற் கூலி?" என்று ஆச்சரியப்பட்டார் காரின் சொந்தக்காரர். வழிப்போக்கர் கம்பீரமாகத் திரும்பினார்; சொன்னார்:—

"காவற் கூலி நான் கேட்கவில்லை. இது என் கார் என்று நினைத்துவிட்டார்கள் அதற்காக மான நஷ்டம்"

வெண்பாப் போட்டி 20

'கண்' என்ற சொல் மும்முறை வரும்படி வெண்பா எழுதவும்

முடிவு தேதி 19-11-55.

முகவரி :— வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6

சிலம்பு வழங்கும் செல்வம்

இராசன்—

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம்.ஏ., எல்.டி.

விழாக் காட்சி நாடகங்கள், ஆங்கில, கிரேக்க, சமஸ்கிருத நாடக மரபுகள் ஆகிய யாவும் உலக நாடக மரபின் தொடக்கக் கால நிலைகளைக் காண நமக்கு உதவுகின்றன.

நாடகக்கலை 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை உடையது. ஆனால், இன்று நாம் காணும் உருவமுடனேயே அது 4000 ஆண்டுகளுக்கு முன்னோ, 2000 ஆண்டுகளுக்கு முன்னோ, 400 ஆண்டுகளுக்கு முன்னோ கூட இருந்ததில்லை. நம் காலத்திலிருந்து பின்னோக்கிச் செல்லச் செல்ல, இன்று காணப்படும் பல கூறுகள் மறைந்து, அக்கால நாடகம் நமக்கு விசித்திரமான வடிவங்களை உடையதாக விளங்குவது காண்போம்.

நம் தமிழகத்திலேயே 40 ஆண்டுகளுக்கு முன் கண்ணையா நாடகக் கழகத்தினர் தான் திரைக் காட்சிகளையும், ஒளிமாற்றம், திரைமாற்ற வசதிகள் ஆகியவைகளையும் பெருக்கி, இன்றைய நவநாகரிக நாடகமேடையைப் படைத்தனர் என்று முதியவர்கள் கூறக் கேட்டிருக்கிறோம். அதற்குமுன் தமிழ் நாட்டு நாடக மேடை இன்றைய தெருக்கூத்திலிருந்து மிகுதி வேறுபட்டதல்ல. ஆயினும், தெருக்கூத்துக்கள் பண்படாதவை. அக்கால நாடகங்கள் பண்பட்ட தெருக் கூத்துகளாக இயன்றன என்னலாம்.

ஷேக்ஸ்பியரும் சிலப்பதிகாரமும்

ஷேக்ஸ்பியர் கால ஆங்கில நாடகம் தமிழகத் தெருக் கூத்தை விட ஒரு சிறிதே முன்னேற்றம் உடையது. தெருக் கூத்தில் சில சமயம் நாடக மேடை முன்புறம் மட்டும் திறந்திருக்கும். சில சமயம் நாற்புறமும் திறந்த மேனியாக இருக்கும். மக்கள் நாற்புறமிருந்தும் நாடகம் பார்ப்பார்கள். ஷேக்ஸ்பியர் கால நாடகங்களில் முன்புறம் மட்டும் திறந்திருந்தது. ஒரு காட்சி முடிந்தவுடன், இன்று திரை மேடையை மறைப்பது போல அன்று மறைப்பதில்லை. நடிகர் சில சமயம் இறங்கிப் போய் வேடம் மாற்றி [illegible]வர், சில சமயம், தொடுத்[illegible] அடுத்த காட்சி நடைபெறும்.

காட்சி முடிவையும் அடுத்த காட்சித [illegible]டக்கத்தையும் காட்ட ஷேக்ஸ்பி[illegible]ம் அவர் கால நாடக ஆசிரியர்[illegible] ஒரு முறையைக் கையாண்[illegible]னர். நாடகம் உரைநடையி[illegible]ந்தால், காட்சியிறுதியில் பேசும் நடிகர் பேச்சிலேயே, 'போய்வருகிறேன்,' 'நாழிகையாயிற்று' என்பன போன்ற சொற்கள் ஆசிரியரால் திமையாகக் கதையுடன் கதையாகப் பெய்யப்படும். இன்றைய திரைக்காட்சிப் படங்களில் 'இடைவேளை' அறிவிப்பில் பல திரைக்கலைஞர் இதே முறையைக் கையாளுவது குறிப்பிடத்தக்கது. நாடகம் பாட்டாய் இயற்றப்பட்டால், கடைசி வரி சற்று நீண்டதாகவோ, எதுகை மோனை வகைகளில் ஏதேனும் தனிச் சிறப்புடையதாகவோ அமைக்கப்படும். நாடகம் பார்ப்பவர்கள் காட்சி முடிகிறது என்று அறிய, இது ஒரு சின்னமாய் உதவிற்று.

சிலப்பதிகாரத்தில் ஒவ்வொரு காதையும் 'என்' அல்லது 'என' பெற்று முடிகிறது. இது ஷேக்ஸ்பியர்கால வழக்கத்தை நினைவூட்டுகிறது.

ஷேக்ஸ்பியர் கால நாடகத்தில் பின்னணித் திரைக்காட்சி கிடையாது. ஆகவே, காலை, மாலை, காடு, ஆறு, கடல் ஆகியவற்றை இன்றுபோல் அன்று கண்கூடாகக் காட்டமுடியாது. ஆகவே, கலைஞர் காட்சித் தொடக்கத்தில் உரையாடல் மூலமே இச்செய்திகளைத் தெரிவித்தனர். காணும் காட்சிகள், இங்கே கேட்கும் கேள்விச் சொற்களாகத் தீட்டப்பட்டன.

சிலப்பதிகாரம் முழுவதிலும் இப்பண்பை ஆங்கில நாடகங்களில் காண்பதைவிட மிகுதியாகக் காணலாம். அந்நாடகத்தைப் பலர் நாடகக் காப்பியம் அல்லது காப்பியம் என்று கருத இப்பண்பு பெரிதும் காரணமாகிறது. ஷேக்ஸ்பியர் கால நாடகத்தின் உதவி இல்லையெனால், இது அக்கால நாடகப் பண்பின் சூழ்நிலை என்பதை நாம் உணர்ந்துகொள்ளவே முடியாது.

விழாக் காட்சிப் பண்பு

ஷேக்ஸ்பியருக்கு முற்பட்ட விழாக்காட்சி நாடகம் உலகத் தொடக்க நாடகப் பண்புகளில் பலவற்றை இன்னும் தெளிவாகக் காட்டுகின்றது. இன்று மேடை ஓரிடத்தில் இருக்கிறது. காட்சிகள் மேடையில் மாறி மாறி வருகின்றன. மக்கள், முன் இருந்து பார்க்கின்றனர். விழாக் காட்சியில் மேடை சகடம் போல் உருண்டோடி ஊர்வலமாகச் சென்றது. இன்று ஒரே மேடையில் எல்லாக் காட்சிகளும் இயங்குகின்றன. அன்று ஒவ்வொரு காட்சிக்கும் ஒரு மேடையாகப் பல மேடைகள் பார்ப்பவர் முன், காட்சி காட்சியாக ஓடின. நடிப்பினால் அன்று காதுக்குக் கேட்கும் பேச்சுநடிப்புக் குறைவு. கண்ணுக்குத் தெரியும் காட்சி நடிப்பே மிகுதி. சிலப்பதிகார முழுவதிலும் தமிழ் இடம் பெற்றாலும் அது கேட்கும் தமிழ் அல்ல, காணும் தமிழ் என்பதை இது நினைவூட்டுகிறது.

கிரேக்க மரபும் சிலம்பு மரபும்

ஆங்கில நாடகத்துக்கு முற்பட்டது சமஸ்கிருத நாடகம். அதற்கும் முற்பட்டது கிரேக்க நாடகம். இரண்டும் நம்மை இன்னும் பழம் பண்புகள் நோக்கி இருவேறு திசைகளில் இழுத்துச் செல்கின்றன.

இன்றைய நாடகத்தில் பெரும்பாலும் உறுப்பினர் எத்தனை பேரோ, கிட்டத்தட்ட அத்தனை நடிகர் நடிகையர் இருப்பதே இயல்பு. சில சமயம் ஒரே நடிகர் இரண்டு அல்லது பல உறுப்பினர் பகுதிகளை நடிப்பதுண்டு. ஆனால், நாடகாசிரியர் ஒரே சமயத்தில் மேடைக்குக் கொண்டு வராத உறுப்பினர் பகுதிகளாக அவை இருக்க வேண்டும்.

முத்தோர் மொழி

தமிழ் மன்னர்களின் சிந்தனைக்கும் வடநாட்டு மன்னர்களின் சிந்தனைக்கும் வேறுபாடுண்டு.

தமிழகத்து மன்னர்கள் அரசு என்பது மக்களுடையது என்றும் மக்களுக்காக ஆளவேண்டியது மன்னர்கள் கடமை என்றும் எண்ணினர். ஆனால் வடநாட்டு மன்னர்கள் அரசு என்பது அரசருடைய உடமை என்று எண்ணினர்.

—அறிஞர் அண்ணா.

கிரேக்க நாடகத்தில் தொடக்கத்தில் ஒரே ஒரு உறுப்பினர்தான் இருந்தார். இடையிடையே அவருக்கு ஓய்வு தந்து, தறுவாய்க்கேற்றபடி பாடும் ஒரு பாடற் குழுவும் இருந்தது. கதையுறுப்பினர் எல்லாரின் பகுதிகளையும் ஒரு நடிகரே நடித்தார். இந்நிலை பெரிதும் நம் நாட்டில் கதைக் கச்சேரி நடத்துபவர் நிலையேயாகும். பாடற் குழுவுக்காகக் கிரேக்க நாடகங்களில் அமைந்த பகுதிகள் சிலப்பதிகாரத்திலுள்ள கானல் வரி, முதலிய இசைப் பாடல்களை நினைவூட்டுகின்றன.

கிரேக்க நாடக மேடையில், நாளடைவில் முக்கிய நடிகருக்குத் துணை நடிகர் ஏற்பட்டனர். உரையாடல்கள் நாடகங்களில் திறம்பட இடம் பெற முடிந்தது இதன் பின்னரே என்பது தெளிவு. கிரேக்க நாடக வரலாற்றில் பிற்காலத்தில்—சிறப்பாக இன்பியலில்—நடிகர் தொகை பெருகிற்று. சிலப்பதிகார நாடகப் பண்பு கிரேக்கர் நாடகத்திலும் பழமையுடைய பண்பு. ஏனென்றால் இங்கே தலை நடிகர் ஒருவரே பெரும்பாலும் நடித்தார். ஒரு சில கட்டங்களில் மட்டுமே துணை நடிகர் பங்கு கொண்டார். தலைநடிகரே கிட்டத்தட்ட எல்லா உறுப்பினர் பகுதிகளையும் நடித்தார்.

சமஸ்கிருத மரபுதரும் ஒளி விளக்கம்

கிரேக்க நாடகத்தின் தலைநடிகரே சமஸ்கிருத நாடகத்தில் சூத்திரதாரராக வருகிறார். தமிழ், மலையாள நாடக மேடைகளிலும் வரும் தலைமை நடிகரே இந்தச் சூத்திரதாரர். ஆனால் படிப்படியாக ஒவ்வொரு பகுதிக்கும் கிரேக்க நாடக காலத்திலேயே ஒவ்வொரு நடிகராக நடிகர் தொகை பெருகிவிட்டதனால், தலைமை நடிகர் நடிப்பாசிரியராகவும் மேடைத் தலைவராகவும் மாறினார்.

சமஸ்கிருத நாடகத்தின் சூத்திரதாரர் பண்பு தமிழ்-மலையாள நாடகங்களை உள்ளவாறு உணர ஒரு சிறந்த வழிகாட்டியாகும். சூத்திரதாரர் என்ற பெயரே இவ்வகையில் மிகவும் முக்கியத்துவம் உடையது. அவர் வேலை, காட்சிகள், இடைக் காட்சிகள், முன்னுரை ஆகியவற்றை எல்லாம் மணிகளை ஒரே சூத்திரத்தில் கோப்பது போல, ஒரே தொடர்புடையவையாகக் கோப்பதேயாகும். கிரேக்க நாடகத்தின் தலைமை நடிகர் அவரே என்பதை இது சுட்டிக் காட்டுவதுடன், அத்தலைமை நடிகருக்குக் கிரேக்க நாடகத்தினும் முற்பட்ட காலத்தில் இருந்த மற்றொரு பண்பையும் இது சுட்டுகிறது.

நாடகக் கலை தொடக்கத்தில் கதை கூறும் கலையிலிருந்தே தொடங்கிற்று என்பதை சூத்திரதாரப் பண்பு காட்டுகிறது. தலைமை நடிகர் கதை கூறுவதாகவும் இருந்ததனால்தான் அவர் சில சமயம் நாடகத் தலைவர் அல்லது சூத்திரதாரராகவும் சில சமயம் நடிகராகவும் விளங்கினார். மலையாளச் சாக்கியர் கூத்திலும் தமிழ்ச் சிலப்பதிகாரத்திலும் அவர் கதை கூறுபவர், எல்லாப் பகுதிகளையும் நடிக்கும் ஒரே நடிகர், அரங்கத்தின் நடு நாயக உறுப்பினர் என்ற மூன்று தன்மைகளையும் ஒருங்கே கொண்டவர் ஆகிறார்.

இம்மூன்று பண்புகளும் இன்றும் கதைக்கச்சேரிகளில் மட்டுமன்றி, வில்லுப் பாட்டு, குறவஞ்சி, பள்ளு, மலையாள நாட்டு ஒட்டந்துள்ளல் (மலையாளக் களியாட்ட நாடகம்), பரதநாட்டியம், கதைகளி, வடநாட்டு நடன நாடகங்கள் ஆகியவற்றிலும் காணலாம். சிலப்பதிகாரம் இன்றைய தமிழர் கண்களில் நாடகமாகத் தென்படாததற்குக் காரணம் இதுவே: நாடகம், கதைக் கச்சேரி போன்ற நிலையில் இருந்த காலத்திய நாடகம் அது, என்பதை நாம் ஓரவேண்டும்.

சமஸ்கிருத நாடகங்களில் உரையும் பாட்டும் விரவியே வந்தன. நடிகர் உணர்ச்சிமிக்க இடங்களில் பாடியும், பிற இடங்களில் பேசியும் வந்தனர். இதன் கலைப் பொருத்தத்தைக் காளிதாசன் போன்ற சிறந்த நாடகாசிரியர் நாடகங்களில் நாம் தெளிவாகக் காண்கிறோம். ஆனால், இதன் தோற்றம் கதை கூறும் மரபிலிருந்து வந்ததே. கிரேக்கர் துன்பியல் நாடகத்தில் கவிதைமட்டுமே பயன்படுத்தினர். இதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். கிரேக்கர் சிறந்த கலைப் பண்புடையவர். துன்பியல் நாடகத்

(11-ம் பக்கம்)

சட்டத்திற்கு அஞ்சாத நெஞ்சுரம் கொண்டோர் கூட, சம்பிரதாயத்திற்கு அஞ்சுகிற விபரீதமான நிலை இன்னும் வாழ்கிறது இந்த உலகத்தில். இதனால் உண்மைக் காதல் - உயர்வு தாழ்வு கருதாக் காதல் வெற்றி பெற முடியாது செத்து சருகாகிப் போகிறது.

மாநிலத்தைக் கட்டியாளும் மன்னர் மகளின் காதலை மாதா கோவிலின் மெழுகு வர்த்தி எரித்துவிட்டது. தேவாலய மணி ஒலியில் அவர்களின் இன்பப் பேச்சு ஒலி இறந்தது! உரிமையை அரிக்கும் சட்டக் கரையான் அந்த உல்லாசிகளின் உறவையும் அரித்துத் தின்றுவிட்டது. அந்தக் காதல் கதையின் முழு விபரம் இங்கே தரப்பட்டிருக்கிறது. (ஆ-ர்)

மலைமீது கல்லடுக்கி மையல் கொண்டோர்

மார்கரெட் பிரிட்டிஷ் இளவரசி ஆறும் ஜார்ஜ் மன்னரின் திருப்புதல்வி. டவுன் செண்ட் விமானி. அவன் தந்தை ரங்கூனில் இராணுவ கர்னலாக இருந்தார். தந்தைக்கு ஏற்ற மகனாக - திறமைசாலியாக - போர்வீரனாக விளங்கினான் டவுன் செண்ட். அவனோடு பிறந்த அறுவரும் பெற்றோரோடு இந்தியாவில் வசித்தனர். டவுன் செண்ட் மட்டும் இங்கிலாந்து திரும்பி அங்கு கல்லூரியில் படித்தான். லத்தீனில் தேர்ச்சி பெற்றான். ஆனால் கணிதத்தில் தேர்ச்சிபெறவில்லை அவன். கவிதைகளைப் படிப்பதில் மிகுந்திருந்தது அவன் கவனம்.

பின்னர், அவனது பெற்றோர் குரோம் என்ற பிரிட்டிஸ் கிராமத்தில் வசித்தனர். அவனது சகோதரிகள் மேல் வகுப்பு ஆங்கிலேயர்களுக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டனர். டவுன் செண்ட் தனது 19-ம் வயதில் சிங்கப்பூர் விமானப்படைக் கல்லூரி மாணவனானான். தேர்ச்சிபெற்ற இரண்டொரு நாட்களில் பாலஸ்தீனத்திற்குப் பணிபுரியச் சென்றான். அந்த நேரத்திலே இரண்டாவது உலகப் போர் தொடங்கிவிட்டது.

பின்னர் ஹெர்ட் போர்டு ஷயருக்கு மாற்றப்பட்டான். அங்கே பிரிகேடியர் டிமோத்திபால் என்பவர் இவனுக்கு நண்பரானார். அவருக்கு ரோஸ்மேரி என்று ஒரு மகள் இருந்தாள். டவுன் செண்ட்டும், ரோஸ்மேரியும் ஒருவரை ஒருவர் நேசித்தனர். திருமணமும் நடந்தேறிவிட்டது. இரண்டாண்டுகளில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றனர். அதன்பின்னர் ஓராண்டு கழித்து (1944) பக்கிங்ஹாம் அரண்மனை விசாரணைதிகாரியாக நியமிக்கப்பட்டான். உயர் வகுப்பினருக்கு மட்டுமே தரப்படும் இப்பதவி டவுன்ட் செண்ட்டின் திறமை குறித்துத் தரப்பட்டது மன்னரால். அரண்மனை ஏவலாளர்களைக் கண்காணித்தல் அவனது முக்கியமான அலுவல். அரச குடும்பத்தாருக்குத் துணையாகச் செல்லல், பிரயாண ஏற்பாடுகளைக் கவனித்தல், முதலியன அவனது இதர அலுவல்கள். ஒருநாள், மன்னர் ஆறும் ஜார்ஜும் டவுன் செண்ட்டும் மன்னரின் தனியறையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது 14 வயதுச்சிறுமி, ஒருத்தி அங்கே காத்துக்கொண்டிருந்தாள். மன்னர், அந்தச் சிறுமியை-தன் மகளை விசாரணைதிகாரி டவுன் செண்டிற்கு அறிமுகம் செய்துவைத்தார். அவளுக்கும் டவுன் செண்ட்டை அறிமுகம் செய்துவைத்தார். எதிர்காலத்தில் தன் மகள் அவனைத்தான் காதலிப்பாள் என்று மன்னர் அறிந்திருந்தால், டவுன் செண்ட்டை அறிமுகம் செய்துவைத்திருப்பாரா? தந்தையால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டவர் பின்னர் சிந்தைக்கினிய காதலனானார்.

டவுன் செண்டிற்கு மன்னர் இலவசமாக வீடு வழங்கினார். இந்த வீட்டில் அவனுக்கு இரண்டாவது மகன் பிறந்தான். இந்தக் குழந்தைக்குப் பெயர் சூட்டுவிழா நடத்தினர்: அதற்கு மன்னர் வந்தார். அவருடன் இளவரசி மார்கரெட்டும் வந்திருந்தாள். இளவரசியின் அன்றைய விஜயம்தான் அவர்கள் காதல் வாழ்வுக்கு நுழைவு வாயிலாக அமைந்தது. அதுமுதல் இளவரசி அடிக்கடி குழந்தைகளைப்

தலைமீது கை வைத்துத் தளர்ந்த கதை கேளீர்!

பார்க்க அங்கே போய்வருவாள்.

அதிகார அலுவல் காரணமாக டவுன் செண்ட்டும், மார்கரெட்டும் அடிக்கடி சந்தித்து வந்தனர். இருவரிடையேயும் சில பழக்கங்கள் ஒன்றுபட்டிருந்ததனால், அவர்கள் சந்திப்பு வளர்ந்தது.

ஆண்டுதோறும் அரச குடும்பத்தார் ஸ்காட்லாந்து மாளிகை செல்வது வழக்கம். அப்படித் தங்கிய சமயமெல்லாம், அவர்கள் இருவரும் மிகவும் நெருங்கிப் பழகினர். கூச்சமின்றிப் பழகினர்.

இதனால், பதினொரு ஆண்டு தாம்பத்திய வாழ்க்கை நடத்திய அவன், தனது மனைவியை விவாகரத்து செய்தான். தன் மனைவி 'ஜான் அடால்பஸ்' என்பவருடன் கள்ள நட்புக்கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டான். அதன்பின், அவளும், ஜான் அடால்பஸ் என்பவரையே மறு மணம் செய்து கொண்டாள். இரண்டு குழந்தைகளும் தாயிடமே விடப்பட்டன. டவுன் செண்ட், அடிக்கடி அந்தப் பையன்களைப் பார்த்துவிட்டு மட்டும் வந்திருக்கிறான்.

ஒரு பொருளை இழந்தபின்னர், இன்னொரு பொருளை மனிதன் அடைய எண்ணுவது இயற்கை. எனவே, டவுன் செண்ட்டுக்கும், மார்கரெட்டுக்கும் இடையேயுள்ள நட்பு அதிகரித்தது. அவர்கள் இருவரும், பல தோட்டங்களிலும், தியேட்டர்களிலும், இரவுக் கிளப்புகளிலும், குதிரைச் சவாரிகளிலும் ஒருவரோடொருவர் நெருங்கிப்பழகி வந்தனர். இவர்களது நேசம்-அன்புப் பிணைப்பு ஊராருக்குத் தெரிந்துவிட்டது.

இவர்கள் இருவரும் ஸ்காட்லாந்து மாளிகையில் தங்கியிருந்தபோது, மாளிகைக்கு எதிரே புல் பூண்டுகள் மிகுந்துள்ள மலைபுச்சிக்குக் குதிரைகள்மீது சென்றனர். அங்கு இறங்கி, நினைவுச் சின்னம் ஒன்றை அமைக்க இளவரசி கல் ஒன்றை வைத்தாள். டவுன்செண்ட்டும் அதன்மீது மற்றொரு கல்லை வைத்தான். அதைத் தொடர்ந்து அவர்கள் அங்கு செல்லும்போதெல்லாம் கற்களை ஒன்றின்மீது ஒன்றாக, நினைவுச் சின்னத்தில் அடுக்கி வந்தனர். இத்தகைய சற்குவியலை பிரிட்டனில் நினைவுச் சின்னமாக அமைப்பது வழக்கம். இது திருமணத்தையோ, சம்பவத்தையோ, காதலையோ நினைவுபடுத்துவதற்காக இருக்கும். இவ்வாறு இவர்கள் வைத்த நினைவுச் சின்னம் மூன்றடி உயரத்திற்கு வளர்ந்து விட்டது.

டவுன்செண்ட் சிறந்த வீரன். அவனைப் பெண்கள் யாவரும் விரும்பினர். அவனது திறமையைக் கண்டு மன்னரே புகழ்ந்திருக்கிறார். அவன் வாங்கிய பரிசுகளைப் பார்த்து வியந்திருக்கிறார். இரண்டாவது உலகப் போரில் சேவை செய்து தனது பெரு விரல் ஒன்றை இழந்திருக்கிறான். துணிவு மிக்க பணி புரியும் வீரன் அவன். எனவே இந்த வீரனை இளவரசி மார்கரெட் காதலித்தது வியப்பில்லை.

எலிசபெத் அரசியாரின் முடிசூட்டு விழாச் சமயத்தில் இவர்கள் காதல் செய்யும் செய்தி அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளிவரலாயின. இதன் காரணமாக டவுன்செண்ட் பல இடங்களுக்கும் மாற்றப்பட்டான். பிரசல்சுக்கு அவனை விமான அதிகாரியாக அனுப்பினர். இதுபோன்ற திடீர் மாற்றங்கள், அரண்மனை ரகசியங்கள் வெளிவராமல் தடுப்பதற்கு, பரம்பரை பரம்பரையாக மன்னர் குலம் செய்து வந்திருக்கிற விரோத ஏற்பாடுகளாகும். இச்செய்தி அறிந்த மார்கரெட் மனம் வாடினாள். 'அன்பே! ஆசைப் பொக்கிஷமே!' என்று அழைக்கும் தன் அன்பர் வேறு ஊருக்குச் சென்றுவிட்டாரே என்ற எண்ணம், அவரோடு உறவாடும் நிலை அற்றுப் போய்விட்டதே என்ற ஏக்கம் அவளை வாட்டியது. செய்தி தெரிந்த இரண்டு நாட்கள் வரை அவள் தன் அறையை விட்டு வெளியே வரவே இல்லை. அவளது உள்ளம் அந்த அளவிற்குத் தாக்கப்பட்டு விட்டது.

டவுன்செண்ட்டும் இந்த நிலையை அனுபவித்தானென்றாலும், அடக்கிக் கொண்டான் தன் உள்ளுணர்வை. அவன் பெல்ஜியத்தில் இருந்தபோது, இளவரசியின் தாதி மிஸ் ஐன்ப்ஸ் என்பவளின் மூலம் இளவரசியுடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தான்.

பிரிட்டனில் வாழ்கின்றவர்களில் பெரும் பான்மையோர் டவுன் செண்ட்டை ஆதரிக்கின்றனர். பத்திரிகை ஆசிரியர்கள்கூட, புத்தவீரனும் கண்ணியம் நிறைந்தவனுமான ஒருவனைத் தங்கள் இளவரசி மணம்செய்துகொள்ளுவதை விரும்புகின்றனர். ஆனால், பண்படாத பழம்பாசி மனமுடையோரும் வைதீகத்தாரும் டவுன்செண்ட்டை வெறுக்கிறார்கள். இளவரசிக்கு டவுன்செண்ட் மணவாளனாக முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற காரணம் இரண்டு. மத சம்பிரதாயத்தில் ஈடுபட்டுள்ள அவர்கள் கூறும் முதற் காரணம், டவுன் செண்ட் சாதாரண வகுப்பைச் சேர்ந்தவன்தானேயொழிய உயர் வகுப்பினரல்ல என்பது. அடுத்த காரணம், அவர் ஏற்கனவே முதல் திருமணம் செய்து, பின் விவாகரத்து செய்து கொண்டவர் என்பது. இந்த இரு குறைகளால்தான் ஒன்றிய உள்ளங்கள் கன்றிப்போன நிலைமைக்கு வந்து விட்டன.

'முதற்காதல் ஓர் எரிமலை அது எப்போது வெடிக்கும் என்று தெரியாது'' எனப் பெரிய பெரிய தத்துவ ஞானிகளெல்லாம் சொல்லிப் போயிருக்கிறார்கள். இளவரசி மார்கரெட்டுக்கு இது முதற்காதல். என்று புகையுமோ? எப்போது வெடிக்குமோ?

பேராசிரியர் இருதயராஜ் மறைவு

திருச்சி நேசையப்பர் கல்லூரிப் பேராசிரியரும் சிறந்த ஆய்வுக் கட்டுரையாளரும், நமது இயக்கத்தின்பால் நீங்காப் பற்றுக் கொண்டவருமான எ. இருதயராஜ் அவர்கள் 5-11-55 மாலை 7-30 மணிக்கு இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம், துக்கித்தோம். திராவிடத் தனியரசுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய பேராசிரியர் மறைந்தது குறித்துக் கண்ணீர் வடித்தோம்.

கல்லூரியில் பணியாற்றிக் கொண்டே போதுப் பணியில் பங்கேற்று, பாடுபட்டு, உழைத்த பேராசிரியர் அவர்களது மறைவால் ஆருத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது உற்றார், உறவினர், மனைவி, மக்கள் அனைவருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கலையையும் வாழ்வையும் இரண்டறக் கலந்துவிட்ட அந்த ஓவியக் கலைஞன் எங்கேயோ வாழ்கிறுன். ஆனுல், இன்பமாக வாழ்கிறுன். அவனை அன்புத் தலைவனுக ஏற்றுக்கொண்டவன், தன் மனைவியைக் குரு காணிக்கையாக அளித்தவன் உக்கிச் சாகிறுன். தினம் தினம் செத்துப் பிழைக்கிறுன். இதில் குற்றவாளி யார்? ஓவியக் கலைஞனு? அல்லது அவனது பின்னேடியா?

★ அன்பே ஆருயிரே! ★

தென்னரசு

"சந்தனம்!"

"............"

"சந்தனம்?"

"அக்கா! பூ தான் பாக்கி, கொஞ்சம் இருங்க அக்கா! அதையும் வைத்துவிட்டு வந்துவிடுகிறேன்."

"பூவா? யாருக்குடா பூ வைக்கிறே...?"

"யாருக்கா? சித்திரம், முடிகிற தருவாயில் இருக்கிறது; அந்த பெண்ணின் தலைமுடியிலே ஒரு பூச்செண்டைச் சூட்டி வருகிறேன் என்கிறேன் அக்கா!"

"சந்தனம் பெண்வீட்டார் கடிதம் எழுதியிருக்காங்க; உன்னை அவுங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்காம். உன்குணம் தங்கக் கம்பிதானும். கல்யாணத்துக்கு தேதியைக்கூடக் குறிச்சு எழுதிட்டாங்க."

"அப்படியா?" சந்தனம் இப்படிச் சொல்லிவிடவில்லை. அவனுடைய மவுனமும், முகச்குறியும் அந்தப் பொருளை விளக்கின. ஒக்கூரிலே தனக்குத் துணைவி வாய்க்கப் போகிறுள் என்பதை நினைத்து நினைத்து குதூகலித்தான். பெரும் புலவர், தமிழ்ப்புலவர் மாசாத்தியார் பிறந்த ஊராயிற்றே என்ரு? இல்லை, தனவணிகச் சீமான்கள் நிறைந்திருக்கும் குபேர பூமி என்ரு? இல்லை. ஓவியர் மலையப்பரின் சொந்த ஊர் தனக்கு மாமனுர் ஊர் என்று சொல்லிக் கொள்வதிலே சந்தனத்திற்கு அவ்வளவு பெருமை!

சந்தனத்திற்கு திருமணம் நிச்சயமாயிற்று. அழகுமிழும் ஆரணங்குகளை சித்திரங்களாகத் தீட்டிப் பார்த்துப் பெருமிதம் கொண்ட சந்தனத்திற்கு, தன் மனைவி எப்படி வாய்ப்பாளோ என்ற பயம் வேறு ஒருபக்கம் அவன் உள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்தது. காப்பியம் கூறும் கட்டழகியா? கடைந்தெடுத்த தந்தச்சிலையா என்ற மனப்போராட்டம் ஒருபக்கம்.

★

வண்ணக்குழம்பையும், தூரிகையையும் கொண்டு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்ட சித்திரக்காரன் சந்தனக்குமார். நெஞ்சில் பட்ட எண்ணங்களை நேர்த்திமிகு ஓவியங்களாக்கி அவைகளை நாட்டிலே உலவச்செய்து தனக்கென ஒரு கலாரசிகப் படையையே தயாரித்துக்கொண்ட இளம் ஓவியன் அவன். சந்தனக்குமார் முறையாகப் படித்து ஓவியனுகவில்லை: சுவரைக் காகிதமாகவும், கரித்துண்டை எழுதுகோலாகவும் கொண்டு எழுதி எழுதிப் பக்குவமடைந்த 'படிக்காத ஓவியன்.' அகநானூற்றுக் காதல் நிகழ்ச்சிகளையும், புறநானூற்று வீர விளையாட்டுகளையும் போட்டுப் பார்ப்பதிலே சந்தனக்குமாருக்கு அலாதிப்பிரியம். மரத்தைக் குடைந்து, மானின் வயிறறைத் துளைத்து, புற்றின் கொண்டையிலே உட்கார்ந்திருக்கும் உடும்பின் முதுகில் பாய்ந்து நிற்கும் அந்த வேகமான அம்பை எய்த தமிழ் வீரர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை கற்பனை செய்து எழுதிப் பார்ப்பதிலே அவனுக்கு இருந்த ஆசை அளவிடகரியதுதான். "சிந்துநதி மிசை நிலவினிலே சேர நந்நாட்டு இளம்பெண்களுடன் சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து, தோணிகள் ஓட்டிவிளையாடுவோமே" என்ற வரிகளை வனப்பு சிந்தும் சித்திரங்களாக்கி தனக்குத்தானே மகிழ்ந்துகொள்வான் - பெருமைப் பட்டுக் கொள்வான். ஆனுலும் தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை என்று அவனுல் சொல்லிக் கொள்ளமுடியவில்லை. அந்தக் கர்வம் சந்தனக்குமாருக்கு ஏற்படவில்லை. ஏன்? ஓவியக்கலையிலே அவனுக்கு பிரியத்தை உண்டு பண்ணத் தக்க வகையில் தலைசிறந்த ஓவியங்களைத் தீட்டிய கலைவள்ளல் மலையப்பரை மனதாலும் பழித்துரைக்க சந்தனக்குமாருக்குத் துணிவில்லை. மலையப்பரை தன்னுடைய மானசீகத்தலைவனுக மதித்திருந்தான். கௌரவத்திற்குரிய ஆசானுவும் எண்ணினுன். மலையப்பரின் கைபட்டு மெருகேறிய சித்திரங்கள் சந்தனத்தின் ஓவியக் கூடத்தில் அலங்கார ஓவியமாகத் திகழ்ந்தன. அந்தப் படங்களைப் பாதுகாப்பதில் அவனுக்கு அவ்வளவு திருப்தி. அந்தத் திருத்தொண்டை, தன்னுடைய ஆசானுக்குக் காட்டப்படும் மரியாதையாகவே அவன் கருதினுன். வழிகாட்டிக்கு நன்றி செலுத்த வேண்டியதுதான்; கற்பித்தவனுக்கு மரியாதை காட்டப்படவேண்டியதும் அவசியம் தான்; ஆனுல் சந்தனக்குமார் மலையப்பர்மீது குருட்டுத்தனமான குருபக்தி கொண்டிருந்தான். சடையுடைய முனிவர்கள் காலத்திய சீடர்களைப்போல சந்தனக்குமார் நடந்துகொண்டான். ஆம், மலையப்பர் அவனுக்குக் கடவுள்; அவனுடைய உயிர் அணுக்கள் ஒவ்வொன்றிலும் மலையப்பர் மறைந்துகொண்டு அவனுடைய தொழிலுக்கு ஊக்குவிப்பதாகவே சந்தனத்திற்கு எண்ணம். இத்தனைக்கும் மலையப்பரைச் சந்தனம் பார்த்ததில்லை. அவர் வாலிபரா, வயது நிரம்பப பெற்றவரா என்று கூடத் தெரியாது சந்தனத்திற்கு. அந்த ஓவியர் தலைவனை ஒருமுறையாவது 'தரிசித்து' விடவேண்டும்; பக்தியைத் தெரிவித்துவிட வேண்டும் என்று ஆசைதான் அவனுக்கு.

மனிதனை ஊமையாக்குவதிலே துக்கத்திற்கும் மகிழ்ச்சிக்கும் ஒரே எடை அளவு சக்திதான்இருக்கிறது. அதிக துக்கமும் மனிதனை ஊமையாக்கிவிடுகிறது. அதிக மகிழ்ச்சியும் மனிதனை ஊமையாக்கிவிடுகிறது இதில், சந்தனம் எதன் கையில் சிக்கிக்கொண்டான் என்பதை மாலைவரை யாராலும் சொல்லமுடியவில்லை. மண நிகழ்ச்சிகள் முடிந்ததும் அவன் யார் கண்ணிலும் தட்டுப்படாமல் மாடியிலேயே முடங்கிக் கிடந்தான். தம்பியின் வாழ்வைப் பொன்னுக்கிப் பூரிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட அக்காள் ஆனந்தியின் கண்களுக்கே அவன் அகப்படவில்லையென்ருல்......!

அவன் தங்கியிருந்த மாடியிலே மூலைக்கு மூலை சித்திரங்கள். அத்தனையும் மலையப்பர் கைபட்டு ஒளிபெற்ற படங்கள். கலையை மனிதவாழ்வுக்குப் பயன்படுத்தும் கலைஞனின் கற்பனையில் எவ்வளவு உண்மை மறைந்துகிடக்கிறது! அறிஞனின் புலமைக்கு, அவனுடைய கற்பனை நூலுக்கு அன்ருட நிகழ்ச்சிகள் நற்சாட்சிப் பத்திரங்களாக அமைந்துவிடுவது போலவே, மலையப்பரின் திறமைக்கு, தெளிந்த கற்பனைக்கு அங்கிருந்த படங்கள் சாட்சி கூறின. ஆம்; மலையப்பர் வரைந்திருந்த சில பல ஓவியங்கள், சந்தனத்திற்குவாய்த்துவிட்ட மனைவியைப் போலவே இருந்தன. சுவரிலே மாட்டப்பட்டிருந்த மனைவியின் புகைப்படத்தையும், அதற்கு எதிரே இருந்த மலையப்பர் வரைந்த ஓவியத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டான் சந்தனம். எல்லையற்ற இன்பம் இதயத்திலிருந்து வழிந்தோடியது. "மலையப்பா, நீ அறிவாலயத்தில் வைத்துப் பூஜிக்கப்படவேண்டிய ஆண்டவன்; எங்கெங்கோ ஆண்டவனைத் தேடிப் போகிருர்களே, கலைக்கோயிலில் வைத்து கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் உன்னைப்போல் இந்த நாட்டில் எத்தனை பேர் இருக்கிருர்களோ?" என்று தன்னையறியாமலே புலம்பிவிட்டான் சந்தனம். இதை எப்படியோ அவனது நண்பர்கள் பார்த்துவிட்டார்கள், "சந்தனம், என்னப்பா, இவ்வளவு சீக்கிரத்தில் இந்த அடிமை புத்தி! உன் மனைவி உன்னிடம் தானே இருக்கப் போகிருள். அதற்குள்ளாகவா பூஜை, வேண்டற்பா எல்லாம்." என்று கிண்டல் செய்துகொண்டு ஒரு இளைஞர் படை மாடிக்கு வந்தது. கேலிக்கூத்துக்கு எதிராக கேடயமாக உபயோகிக்கப்படும் சமாதானங்கள் எங்கே வெற்றி பெற்றிருக்கின்றன? நண்பர்கள் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பொலியைத் தனக்குச் சாதமாக்கிக் கொண்டே சந்தனம் அந்த படங்களை ஏறிட்டுப் பார்த்தான். அவன் முகத்திலே புன்னகை துளிர்விட்டது. அவனது கருவிழிகளில் அந்தப் படங்கள் இரண்டும் நிழலாடி நின்றன.

"சந்தனம்!"-அக்காள் அழைத்தாள்.

சந்தனம் எழுந்துபோனுன். "சந்தனம், உனது மாமனர் உன்னை இன்னும் ஒருவாரம் இங்கே இருந்துவிட்டுத்தான் போகவேண்டும் என்கிருர். என்ன சொல்கிருய்?" என்று கேட்டாள் ஆனந்தி. உள்ளூர சந்தனத்திற்கு ஒக்கூரில் தங்க ஆசைதான். ஆனுலும் அக்காள் கேலி செய்வாளே என்பதற்காக, "வேண்டாம் அக்கா! அக்கம்பக்கத்தார் தவருக எண்ணிவிடுவார்கள்" என்று அக்காள் ஆனந்திக்கு சமாதானம் சொன்னுன். ஆனுலும் ஆனந்தி சந்தனத்தைச் சமாதானப் படுத்தி அவனை ஒக்கூரில் தங்க வைத்துவிட்டுப் போனுள்.

மறுநாள் காலை! சந்தனத்திற்கு ஒரு இன்பச்சேதி எட்டியது. மூன்று மாத காலமாக மலாய் நாட்டில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் தாயகம் திரும்பும் பிரபல ஓவியர் மலையப்பருக்கு வரவேற்பு என்று ஒக்கூர் முழுதும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைத் தேடக்கிடைக்காத 'தெய்வீகத்தன்மை' பெற்றதாகவே அவன் எண்ணினுன். எந்த வகையிலேனும் தன்னேடு பிணைக்கப்பட்டவர்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பெரும்பகுதி மனிதர்கள் சுயநினைவு இழந்துவிடுகிருர்கள். மதகுடித்த பிறவிகளாகி, ஆசை நினைவுகளில் மூழ்கிப்போய்விடுகிருர்கள்.

★

மலையப்பருக்கு வரவேற்பு நடைபெற்ற மைதானத்திற்குப்போனுன். வெதும்பிப்போன எலுமிச்சை போன்ற மலையப்பரின் உருவம் சந்தனத்திற்குத் திகிலை ஊட்டிய தென்ருலும். மலையப்பனைப் பார்த்துவிட்டோம் என்ற திருப்தி அந்தக் குறையைச் சாகடித்தது.

விழா முடிந்தது பெருங்கூட்டம் ஒன்று மலையப்பரைச் சூழ்ந்துகொண்டிருந்தது. சந்தனம் கூட்டத்தினுள் நுழைந்து மலையப்பருக்கு தன்னைத்தானே அறிமுகம் செய்துகொண்டான். அதற்குமுன் அரைகுறையாகக் கேள்விப்பட்டிருந்த சந்தனத்தைத் தட்டிக் கொடுத்துவிட்டு அன்று இரவு வீட்டுக்கு வரும்படி அன்புக்கட்டளை இட்டார் மலையப்பர். அவ்வளவுதான்! தலைகால் தெரியவில்லை சந்தனத்திற்கு. வீட்டுக்கு ஓடிவந்தான், வேறு உடை உடுத்தினுன்.

புனிதா!-என்று கூவினுன், அப்போதுதான் முதன் முறையாக அவன் மனைவியைப் பெயரிட்டு அழைத்தான் சந்தனம். 'சோமவாரங்களும்' 'கார்த்திகைகளும்' அதுவரை அவனுக்கு, அவளை 'கைக்கெட்டியும் வாய்க்கெட்டாக்கனி'யாக ஆக்கிவந்தன. புனிதா! புனிதா! என பலமுறை அழைத்தான் பதிலில்லை.

இரவு நேரம்! சந்தனம் தனியாக மலையப்பர் வீடுநோக்கி நடந்தான். 'இவர்தான் புது மாப்பிள்ளை' என்று தெருவிலே நின்று பலர் பேசுவது அவன் காதில் விழுகிறது. சந்தனம் கம்பீரமாக நடந்துசென்ருன். மலையப்பரின் வீட்டில் யாருமில்லை. ஓவியக்கூடம் திறந்து கிடந்தது. ஒளிவண்ணச் சித்திரங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

அதில் ஒரு சித்திரம்!-சந்தனத்தின் கண்களைப் பிடுங்கி, மூளையைக் கசக்கிக் கூழாக்கியது. 'புனிதா' என்று வாய்விட்டு அலறிவிட்டான். ஆம். அது புனிதாவின் புகைப்படம். வீட்டிலே கண்டு மகிழ்ந்தானே அதே புகைப்படம். 'மலையப்பா என் உயிர் கொலையப்பா!' என்று கத்தினுன். மனைவியின் படம் மலையப்பரின் ஓவியக்கூடத்திற்கு எப்படி வந்தது?

★

இரண்டு வாரங்களுக்குப்பின்!

"டில்லியிலே நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் தமிழ்நாட்டு ஓவியர் மலையப்பர் பதக்கம் பெற்ருர். பரிசளிப்பு விழாவில் அவருடைய மனைவி புனிதாவும் கலந்துகொண்டாள்' என்று பத்திரிகைச் செய்தியை அவன் வாயாலே படித்தான்.

அன்புக்குரிய தலைவன்-சரியாகவோ தவருகவோ 'ஆருயிராக' வாய்க்க இருந்த புனிதா-இருவரையும் சந்தனம் சாகும்வரை மறக்கவில்லை. வாழ்வு முழுதும் அவன் பார்வையிலே ஏமாற்றமும், ஏக்கமுமே ஒளிந்துகிடந்தன. பாவம்!

★

வேலங்குடித் திருவிழா

7

சுந்தரம் அந்தக் கைதியின் பெயரை அறிந்து கொள்ளத் துடித்தான். வாய்திறந்து கேட்கப் போகும் சமயம் புகைவண்டி ஊதிற்று. போலீசார் வண்டியிலேறிஞர்கள். சுந்தரம் தலையை உள்ளே இழுத்துக் கொண்டான். வண்டி நகர்ந்தது. அம்பிகா தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். குமுறும் எண்ணக் குவியல்கள் வெளியில் வந்து விழட்டுமா என்று அவளைக் கேட்டுக்கொண்டிருந்தன. சுந்தரம் அவளைப் பார்த்து, "பாலனுக்கும் உனக்கும் தவருன உறவு இல்லை என்னும்போது சமீப நிகழ்ச்சிகளெல்லாம் நாடக பாணியில் நடந்தது ஏன்?—என்ன இப்படிக் கேட்கிருனே என்று வருந்தாதே! உன் வாழ்வை வளப்படுத்த நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராயிருக்கிறேன். அதை எந்த முறையில் நிறைவேற்றவும் சித்தமாயிருக்கிறேன். ஆனால், அதற்கு முன்பு, உன் இன்றைய வாழ்வு தண்ணீர் காணுது சாய்ந்து கிடக்கும் கொடியா? தணல் பட்டுக் கருகிப்போன மலரா? என்பதைத் தெரிந்து கொள்ள நான் ஆசைப்படுகிறேன். சாய்ந்த கொடியைத் தலை நிமிர்த்தி வைக்கமுடியும். கருகிப்போன மலரை என்னம்மா செய்யமுடியும்? அதற்காகத்தான் கேட்கிறேன்"--என்ருன். அவனது இந்தக் கேள்வி அம்பிகாவுக்குப் பல்வேறு உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டது. தியாகம் செய்கிறேன் என்கிருரே நாம் நெறியானவள் என்றால் ஒருவேளை...? — இந்த சந்தேகம் அவளுக்கு மகிழ்ச்சி கலந்த உணர்ச்சியை எழுப்பிற்று. நல்ல வேளை! பலமுறை வந்த ஆபத்துக்களில் நமது கற்பு அழிந்திருந்தால்...? இந்த உணர்ச்சி அவளை ஒருவிஞடி தொட்டுவிட்டு ஓடிற்று. சுந்தரம் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அம்பிகா துவங்கினுள்:

"சொல்லுகிறேன், என் கதை முழுவதையும் சொல்லுகிறேன். நீங்கள் சினிமாப் பார்த்திருப்பீர்கள். அதிலே அடிக்கடி ஒரு பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பழைய கோவலன் படத்திலிருந்து சமீப காலம் வரை தொடர்ந்து நடித்துக்கொண்டு வந்தாள் நடிகை ஒருத்தி. பெயர் ரெங்கலட்சுமி. அவள் தான் என் தாய்."

—சுந்தரம் திடுக்கிட்டான். ரெங்கலட்சுமி! திரையில் தோன்றினுலே ரசிகர்களின் கைதட்டல்களைப் பெற்ற நடிகை. பல ரசிகர்களுக்குப் பைத்தியம் பிடிக்க வைத்தவள். சோப்பு விளம்பரம் முதல் சுவரொட்டிகள் வரையிலே வெளிச்சம் போட்டுக்கொண்டிருந்த நடிகை.

அவள் அம்பிகாவின் தாய். சுந்தரத்தின் கண்கள் அகல விரிந்தன. இப்போது அவளைப் புது மாதிரியாகப் பார்க்க ஆரம்பித்தான். நடிகையின் மகளாதலால் சுவைமிக்க நாடகங்கள் பல அவளது வரலாற்றின் இடையில் வரும்—என்று தீர்மானித்துக் கொண்டான். கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். அம்பிகா தொடர்ந்தாள்:

"என் தாய் நல்ல குடும்பத்தில் பிறந்தவள்தான். என் தாயைப் பெற்ற பாட்டனுர், சிங்கப்பூரிலேயே பெரிய வியாபாரியாக இருந்தவர். அவர்களுக்குச் சொந்த ஊரேசென்னை யல்ல. கோட்டையூரை அடுத்த வேலங்குடிதான்."

—சுந்தரம் ஆச்சரியப்பட்டான். "நம் பகுதிக் குடும்பந் தானு"—என்று மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

"என் தாயைப் பாட்டனும் பாட்டியும் நன்ருகவே வளர்த்தார்களாம். சிங்கப்பூரிலேயே கொண்டுபோய் வைத்திருந்தார்களாம். என் தாயும் அங்கேதான் படித்தாளாம். பதினேழு வயதாகும் போது, என் தாய் பருவப் பெண்ணுயிருந்த போது கட்டுக்கடங்காமல் நடக்க ஆரம்பித்தாளாம். அதாவது, என் பாட்டன் சொல்லைக் கேளாமல் ஊர் சுற்றுவதும், சினிமாவுக்குப் போவதும், ஊதாரிச் செலவு செய்வதுமாக இருந்தாளாம். அதன்றி சிங்கப்பூர் வாழ்வில் நெறிதவறி நடந்ததில்லையாம் என் தாய். வேறு விதமான பொழுது போக்குகளில்தான் அதிகக் காலத்தையும் பணத்தையும் செலவழித்தாளாம். அதையே பொறுக்க முடியாத பாட்டனுர் என் தாயையும் பாட்டியையும் வேலங்குடிக்கே அனுப்பிவிட்டாராம். வேலங்குடியில் வாழ்ந்தபோதுதான் என் தாயின் காதல் நாடகம் ஆரம்பமாயிற்றும். அது படிப்படியாக வளர்ந்து, என் தாயின் வாழ்க்கைப் பாதையையே திசை திருப்பிவிட்டதாம். ஊரிலேயே நல்லவர்கள் கெட்டவர்கள் எல்லோருக்கும் ரெங்கலட்சுமி என்ருல் தெரியுமாம். அவ்வளவு மோசமான வாழ்க்கையில் உழன்ற என் தாயைத் திடீரென்று சில சினிமாக்காரர்கள் சந்தித்தார்களாம். வேலங்குடித் திருவிழாவைப் படம் பிடிக்க வந்த அந்த சினிமாக்காரர்கள் என் தாயை அங்கு சந்தித்து அவளைச் சென்னைக்கு அழைத்துக் கொண்டு போனுர்களாம். அங்கே தோழி வேஷத்தில் துவங்கி, தொடர்புகளை வளர்த்துக்கொண்டு, கதாநாயகி வேஷத்தில் மின்ன ஆரம்பித்தாள் என் தாய். இதற்கிடையில் என் தாய் சென்னைக்கு வந்ததுமே ஒரு படமுதலாளியோடு கொண்ட தொடர்பில் தான் பரிதாபத்திற்குரிய நான் உருவானேன். அதற்கு மேல் என் தாயின் வரலாற்றை விரித்துரைக்க நான் விரும்பவில்லை. வயது ஏற ஏற, பொலிவேறி விளங்கியதால், என் தாய் பல காலம் கதாநாயகியாக நடித்து வர முடிந்தது. சமீபகாலத்தில் தான் தாய்வேஷம் போட்டு நடிக்க ஆரம்பித்தாள். எனக்குப் பருவம் வந்ததும் எப்படியாவது என்னையும் சினிமாவில் சேர்த்து சினிமா உலகில் தனக்கிருந்த செல்வாக்கை, தலைமுறை தலைமுறையாக நிலைநாட்டிக் கொள்ள என் தாய் விரும்பினுள். அதற்காக சினிமாவில் அவள் அறிந்திருந்த வழிகளையெல்லாம் கடைப்பிடிக்க ஆரம்பித்தாள். திடீரென்று ஒரு படமுதலாளியைக் கூட்டிவருவாள். என்னைச் சிங்காரித்துக் கொள்ளச் சொல்வாள். தானே மலர் சூடிவிடுவாள். கொஞ்சதூரத்தில் போய் உட்கார்ந்தாலும் படமுதலாளியின் பக்கத்தில் போய் உட்காரும்படி கட்டாயப்படுத்துவாள். நடிப்புத் திறமையைக் காட்டிலும் அதுபோன்ற விளைவு, குறைவுகள் தான் ஒருத்தியை



உச்சாணிக் கொப்பிலே தூக்கி வைக்கமுடியும் என்று அடிக்கடி போதிப்பாள். ஒரு நட்டுவனாரை வைத்து நாட்டியம் சொல்லிக் கொடுத்தாள். ஆடை அணி மணி பலவிதங்களிலும் வாங்கிக் கொடுத்தாள். என் இளமையின் பொலிவு எப்படிச் சிங்காரிக்கப்பட்டால் பிறரைக் கவருமோ அப்படிச் சிங்காரிப்பாள். என் நாட்டிய அரங்கேற்றத்தை ஒரு நாள் நடத்திவிடத் தீர்மானித்தாள். ஊரிலே நாட்டிய அரங்கேற்றமென்றால் பெரிய மனிதர்கள்; படித்தவர்கள் தலைமையில் நடத்தப்படுவது வழக்கம். என் தாய் என் நாட்டிய அரங்கேற்றத்தை ஒரு படமுதலாளியின் தலைமையில் நடத்தத் தீர்மானித்தாள். அந்த முதலாளி நன்றாகக் குடிக்கக் கூடியவர். ஒரு வெள்ளிக்கிழமையில் என் நாட்டிய அரங்கேற்றம் அவர் தலைமையில் நடந்தது. நன்றாகவே ஆடினேன் கைதட்டுதல் பெற்றேன். பலரது கண்களிலும் பட்டேன். அரங்கேற்றம் முடிந்தது. முதலாளி தலைமை வகித்துப் பேசும்போது என்னுடைய ஆட்டம் அவரை மிகவும் கவர்ந்ததாகவும் இப்பொழுதே தூக்கிக்கொண்டு ஓடிவிடலாமென்று தோன்றுவதாகவும் குடிவெறியில் குறிப்பிட்டார். அதன்றியும் என்னை அவர் வர்ணித்துக்கொண்டு போன முறை, சபையினரில் பலரைத் தலைகுனிய வைத்ததோடு, என்னையும் அவமானத்தில் ஆழ்த்திற்று. பிறகு, தியேட்டரிலிருந்து நான். என் தாய், நட்டுவனார் மூவரும் ஒரு காரில் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்த முதலாளி அதோடு போய்விடுவார் என்று இருந்தேன்: இல்லை. நேரே எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். என் தாய் எனக்குச் சாடையாக உபதேசிக்க ஆரம்பித்தாள் ஏதோ எதிர்காலம் என்று ஒன்று எனக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகவும் அதிலே மாட மாளிகையும் கூட கோபுரமும், பேரும் புகழும், பெருவாழ்வும், சீரும் சிறப்பும் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் போதிக்க ஆரம்பித்தாள். "அந்த உலகத்திற்கு முதற்படி இன்றுதான் ஆரம்பமாகப் போகிறது. உன் முட்டாள்தனத்தினால் அதைத் தவற விட்டு விடாதே" என்றாள். எனக்குப் புரிந்தது. நான் திகைத்தேன். செத்தாலும் சரி, அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று அதற்கு மறுத்தேன். நட்டுவனாரை அனுப்பி சரிக்கட்ட முயன்றாள். அவரிடத்திலும் நான் கண்டிப்பாகச் சொல்லிவிடவே, வேறு வழியில்லை என்ற நிலையில் பயமுறுத்த ஆரம்பித்தாள். நான் தற்கொலை செய்துகொள்வேன் என்றாள். கிணற்றுக்கு ஓடினாள். குதிக்கப் போவதுபோல் அபிநயித்தாள். நான் என்ன செய்ய முடியும்? சம்மதித்தேன். ஆனாலும் படமுதலாளி குடிகாரன், கிழவனாகையால் என்னைக் காத்துக்கொள்ள முடியும் என்று நம்பினேன். என் சம்மதத்தை என் தாய் முதலாளிக்குத் தெரிவித்தாள். உடனே இரண்டாயிரம் ரூபாய்க்கு முதலாளி ஒரு 'செக்'குக் கொடுத்தார். என்னைப் பார்த்துச் சிரித்தபடி அப்போதே தொட முயற்சித்தார். உலகத்தில் மனிதன், மிருகம் என்ற இருவேறு கூறுகள் அந்த நேரத்தில் மட்டும் பேதம் தெரியாமல் காட்சியளிக்கின்றன. ஆம்; குடிவெறியில் அந்த முதலாளி அப்போதே மிருகமாக முயற்சித்தார். என் தாய் உடனே படுக்கையறைக்குச் சென்று அதை அலங்கரிக்க ஆரம்பித்தாள். படுக்கையில் மலர் தூவினாள். அறையில் ஊதுவத்தி ஏற்றிவைத்தாள். அதைக் கவனித்த நான், மெதுவாக முதலாளியின் அருகில் போய் உட்கார்ந்து, இங்கே வேண்டாம், உங்கள் வீட்டுக்கே போய் விடுவோம் என்றேன். அவர், வீட்டில் தனியாகத்தானிருந்தார். அவர் மனைவி இறந்து பல காலமாகி விட்டது என்று எனக்குத் தெரியும்—என் தாய் சொல்லியிருந்தாள். முதலாளியும் சம்மதித்தார். "ஒரு வாரத்திற்கு உன்னை என் வீட்டை விட்டு வெளியில் விட மாட்டேன்" என்றார். நான் சம்மதித்தேன். பிறகு என் தாயிடம் சொல்லிவிட்டு என்னை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அவர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

போனதும் போகாததுமாக என்னைப் பள்ளியறைக்கு இட்டுச் சென்றார். பக்கத்தில் உட்காரச் சொன்னார். நான் அங்கிருந்த மதுவை எடுத்துக் கோப்பையில் ஊற்றினேன். சோடாவை உடைத்து ஊற்றப் போவதுபோல் பாவனை காட்டிவிட்டு, முழுக்க கலப்பில்லாத மதுவையே ஊற்றினேன். உன் கையாலேயே கொடு—என்றார். கொடுத்தேன். குடித்தார். அடுத்து என்ன என்றார். ஆடுகிறேன்—என்றேன். அவருக்குப் போதையேறும் வரை அருகில் போகக்கூடாது என்று முடிவு கொண்டேன். தாளம் தப்பியே ஆடினேன். சஞ்சலப்பட்ட மனதுக்கு சங்கீதமா பிடிபடும்? பலவந்தமாகப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு நான் ஆடினேன். அவர் ஓங்கிச் சிரித்து ரசித்துக் கொண்டிருந்தார். நேரம் ஆக ஆக, அவர் தலை சுற்ற ஆரம்பித்தது. நா குழறத் தொடங்கிற்று. நான் உடனே அடுப்பங்கரையைத் தேடி உணவு எடுத்துக்கொள்ள ஓடிவந்தேன். அவர் எதிரில் வைத்தேன். நிறையச் சாப்பிட்டார். கிழவயது. அதிகமான குடி. அளவுக்கு மீறிய உணவு. என்ன ஆகும்? மயங்கித் தூங்க ஆரம்பித்தார். பலமான குறட்டை—அதைச் சோக இசையாக்கிக் கொண்டு இருள் கப்பிய எனது நெஞ்சம் எண்ணங்களைப் பின்ன ஆரம்பித்தது. தவறான ஒருத்திக்குப் பிறந்த காரணத்தால், குலமுறை மாதாக மற்றவர்கள் கண்ணில் படமுடியாமல் போன என் வாழ்வு, உலகம் என்னைப் பற்றிப் போடுகிற கணக்கிற்கே என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுமோ, என்று அஞ்சினேன். நாற்காலியில் சாய்ந்தபடியே பயங்கரச் சுழல்களின் நாலாயிரம் பகுதிகளுக்கும் பறந்து சென்றேன். நாளுக்கொரு கணவன் வேளைக்கொரு விருந்து ஆளுக்கொரு மாதிரி அபிநயம், தோளுக்குத் தோள் தாவித் தொத்தி...ஐயோ, இன்றைக்கு நினைத்தாலும் அன்றைய நினைவின் பயங்கர எதிரொலி என்னை வாட்டுகிறது. அவ்வளவு எண்ணினேன். அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியறையில் நடக்க ஆரம்பித்தேன். ஏதோ சிந்தனையில் மாடிப் படிகளில் ஏறினேன். மொட்டை மாடியில் வந்து நின்றேன். வானத்து நிலவும், தாரகையும். ஆடிவந்த இளங்காற்றும் கொதித்திருந்த என் இதயத்தைக் குளிர வைத்தன. கொஞ்ச நேரம் அப்படியே அந்த மாடியில் நின்று கொண்டிருந்தேன். ஒரு சுதந்தரப் பறவையாக, கட்டுப்பாடில்லாத காரிகையாக, என் அனுமதியின்றி என்னை யாரும் தொடமுடியாத அளவுக்கு சுயேச்சை உள்ளவளாக, என்னை என் நெஞ்சம் கற்பித்துக் காட்டியது. ஓரளவுக்கு மனத்தெளிவு பெற்று, மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரில் நான் சாய்ந்துகொண்டு நிற்கும் போது, எதிர்த்த மொட்டை மாடியில், நடக்கும் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். பாலன் அங்கே நின்று கொண்டிருந்தார். அவர் எனக்கு அறிமுகமானவரல்ல. அதனால் நான் பேசாயலிருந்தேன். அந்த நிலவொளியில் என்னை ஊன்றிக் கவனித்தார் அவர். நான் நின்ற இடத்திற்கும் அவர் நின்ற இடத்திற்கும் பத்தடி தூரம் தானிருக்கும். வைத்த கண் வாங்காமல் அவர் என்னைப் பார்த்தார். கடைசியில் "நீங்கள் தானே இன்றைக்கு நாட்டிய அரங்கேற்றம் நடத்தியது" என்று கேட்டார். பத்திரிகைப் பிரதிநிதி என்ற முறையில் அவரும் அரங்கேற்றத்திற்கு வந்திருந்தாராம். நான் "ஆமாம்" என்றேன். "ஆட்டம் நன்றாக இருக்கிறது—என்றார். அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன். இங்கே தான் இருக்கிறீர்களா—என்றார். இல்லை—என்றேன். எதற்கு வந்தீர்கள்?—என்றார். சும்மா—என்றேன். இது பயங்கரமான இடமாயிற்றே—என்றார். தலையை ஆட்டினேன் ஐயோ பாவம்—என்றார். அப்படி ஒன்றும் இல்லை—என்றேன். இந்த வயதில் கூட அவருக்கு எவ்வளவு ஆசை?—என்றார். நான் பேசாமல் நின்றேன். நான் அப்பொழுதே நினைத்தேன்—என்றார். அவரென்ன? தலைமை தாங்குகிறார் முதலாளி என்றதும், சமுதாயம் முழுவதும் அப்படித்தானே கருதும். கலியாட்டத்தில் அவ்வளவு பிரபலமானவராயிற்றே அவர். நான் அவ்வளவு சுலபமாக ஏமாற மாட்டேனென்றேன். அதை நம்பாதவர் போல அவர் சிரித்தார். எப்படி நம்புவார்? புலிக்கூண்டுக்குள் கறி கிடக்கிறதென்றால் புலி அதை அழகு பார்க்கக் கொண்டு வந்திருக்கிறதென்று யார் நம்புவார்கள்? சரி வருகிறேன்—என்று சொல்லிவிட்டு அவர் போய் விட்டார். நானும், நாம் உத்தமி என்பதை நம்மைத் தவிர இனி யாரும் நம்பமாட்டார்கள் என்ற முடிவோடு கீழே இறங்கி வந்தேன். எப்படி நம்புவார்கள்? நம்பவேண்டுமென்று நாம் தான் எதிர்பார்க்க முடியுமா? உண்டது காபி தான் என்றாலும், உட்கார்ந்திருக்கும் இடம் மதுக்கடை என்றால், ஊதிக்காட்டினால் கூட ஒப்புக் கொள்ள மாட்டார்களே கண்டவர்கள்! நான் மெதுவாக அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தேன். முதலாளி அப்போது தான் விழித்துத் திரும்பிப் படுத்தார். ஏதோ நினைவுக்கு வந்தவர்போல் திடீரென்று எழுந்தார். கதவைத் தாளிட்டார். "நேரம் பாழாய்ப் போச்சு! வா! வா!" என்றார். எட்டிப்பிடித்தார்.

தொடரும்

திருமேனித் தியாகியார் புராணம்

புதுமைமிகு புகையிலையார் புராணமதை முன்னிதழில் ★
விதந்துரைசெய் தாம்; இதனில் வேட்கைமிகு அடியவரை
நிதம்பணிந்து திருமேனித் தியாகமது செய்திறைவர்
பதமடைந்த பணிமொழியின் பழஞ்சரிதை பகர்ந்தருள்வாம்.

கங்கையமு தொளித்தசடை கனல்வணத்தர் கண்ணுதலர்
மங்கைஉமை பொன்னுடலை மருவிஒரு வாஉடலர்
தங்கியுள தடவரையில் தவமுயலும் கயவர்முனி
புங்கவர்கள் தங்கள்மனம் போக்கினரோர் பூவையின்மேல்.

வானுலகத் தேவர்இள வனிதையர்கள் உடன்சூழ
ஊன்பிறவி நீக்கியருள் உமைகொழுநர் பாதஇணை
தேன்மலர்எண் ணிலதூவித் தெண்டனிட வந்தவர்கள்
கான்வளரும் கைலைநலம் கருதிசில நாள்கழித்தார்.

நிழல்வரையில் நேரிழையர் நீள்விழியில் துடித்துமவர்
குழல்புயலைக் கோதிஇதழ் கொழிக்கும்சுவை அமுதுண்டும்
வழக்கமற வாதவர்தம் கழல்வணங்கும் தேவர்செயல்
பழக்கமறி யாமுனிவர் பார்த்துமனம் பதைத்தேங்கி;

இறைவன்வரை பாலைநிலம் இலைஒன்றும் பனிதவிர;
குறைவறுநற் பொன்னுலகம் குறுகினுமோர் பயனுண்டாம்
இறைவனையர் இளம்பெண்டிர் இன்பமுறல் இயலுமென
இறைவர்புகழ் மறந்தினையர் எழில்மார்பம் தமைநினைப்பார்.

உமையோகம் பயின்றருளும் ஒப்பிலொரு பெருங்கடவுள்
தமைமறந்து தவசியர்கள் தாழ்குழலர் பூவுடலில்
அமைநோக்கம் கொண்டகுறிப் பறிந்துவளர் சினமூண்டு
இமையவரை அழைத்து.வரை துறந்தொழியப் பணித்திடலும்;

மறவீரர் அசுரரெணி மனமொடிந்து வாழுநரும்
பிறர்மனைகள் விழைவாரும் ஆனதிரு வானவர்கள்
மறுவளரும் மிடறுடைய மதிச்சடையன் கழல்வணங்கித்
திருமுனர்யாம் வணங்கிஉரை செய்திஉளம் கொளல்வேண்டும்.

தங்களையாம் வந்தனைகள் செய்தருளைப் பெற்றவுடன்
எங்களுல கேகிடவே எண்ணினம்எம் ஏந்திழையர்
இங்குளநிற் காட்சிகளை இருந்துநுகர் வேமெனவே
தங்கினம்யாம் இம்மலையில் சிலகாலம் தவறுண்டோ ?

பிழைஎனினும் பொறுத்தருளல் பேரியோய்நின் கடன்எனவே
குழையும்உடல் உளத்தோடு குனிந்துபணிந் தேத்திடலும்
கழைநாணும் தோளிஉமை கணவன்சினம் பறந்தேகி
உழையிருந்த ஊர்வசியை உடனழைத்து மொழிந்திடுவார்.

உன்னுடைய ஒளிவடிவின் நடனமது நான்நோக்கி
எண்ணிலயாண் டேகினநீ இன்றுவனைந் தாடுகென
நன்றெனவின் னவர்மன்னன் நற்பார்வை யருளிடமான்
கன்றெனநின் றுடிகுதித் தோடிநடம் புரிந்திடுவாள்.

வேறு

இங்ஙனம் ஆடிப் பாடி இறைவனை மயங்க வைத்த
நங்கைஊர் வசியின் மேனி நல்லொளி மூழ்கல் வேண்டி
எங்கணும் யோகி ருந்த எண்ணிலா முனிவர் வந்து
கங்கைவார் சடையார் பின்னால் கண்மறை வாக நின்றார்.

ஆடிடும் மின்னல் போல்வாள் அங்கங்கள் அழகில் சொக்கி
வாடிடும் முனிவர் தம்மை வந்திருக்கு மஞ்சு மந்த
கூடையர் கூத்தி கங்கை குளிர்புனல் தலையில் ஏற்கும்
ஆடகப் பொன்வ ணத்தர் அறிந்திட வில்லை ! என்னே !

ஊர்வசி, இறைவன் பின்னால் ஒருமிக்க சேர்ந்தி ருந்து,
பார்வையாம் வேல்க ளாலே பதைத்திடக் குறிபார்த் தெய்து
வேர்வைவிட் டழுங்கும் மோனத் தவசியர் கூட்டம் தன்னை
மார்புறத் தழுவி இன்பம் மகிழ்ந்திடும் எண்ணம் கொண்டாள்.

எண்ணிய எண்ணத் தால்கால் இடறிடத் தரையில் வீழ்ந்தாள்;
கண்ணுதல் பெருமான் அன்னாள் கண்ணிய துணர்ந்தார் பின்னால்
எண்ணம்வே றுகி நிற்கும் எண்ணிலா முனிவர் கண்டார்
புண்ணில்தேள் கொட்டி னாற்போல் பொங்கிற்று சினமும் ஓங்கி.

என்திரு வரை இருந்தும் இழுக்குடை எண்ணம் கொண்டீர்,
மண்ணில் போய் நீவிர் எல்லாம் மறுபிறப் புறுவீர்; மாது
மின்னல் ஊர் வசியும் அங்கோர் மிடுக்குடை மங்கை ஆவாள்,
என்னலும் முனிவ ரெல்லாம் இறையடி வீழ்ந்து போற்றி;

அய்யனே எங்கள் திமை அனைத்தும்நீர் பொறுத்தல் வேண்டும்,
வையமேல் நாங்கள் எந்த வகையினில் வாழ்வோம் ? என்று
துய்யமின் துணைய டிக்கீழ் தொடக்கலுந் துய்வோம்! என்று
கையற ஏங்கி நிற்கக் கைலைவாழ் நாதர் சொல்வார்.

மங்கைஊர் வசிதான் மண்மேல் மரகத வல்லி யாகித்
தங்குவள் பூவி ருந்த வல்லியில்; அன்னாள் மாமன்
பொங்கிடும் காத லாலே மணம்புரிந் திடுவன்; ஆனால்
நங்கையின் ஆசை யெல்லாம் நம்மடி யவர்கள் மேல்தான்.

முனிவராம் நீவிர் சென்று முதியஊர் அதனில் வாழ்வீர்;
கனிஇதழ் மாதர் வாழும் கடிமனை எல்லாம் ஏறிப்
பணிமொழி பயிற்றிப் பிச்சைப் பாத்திரம் நீட்டி, அம்மா
இனிஉயிர் இல்லை பிச்சை இல்லையேல் என்றி ரப்பீர் !

மரகத வல்லி வாழும் மனையைநீர் அடையும் போது
விரகநோய் தன்னால் அன்னாள் வாடுவள் வருவள், உங்கள்
திருவடித் தொழுது கண்ணால் திருவுளம் குறிப்பள் அவனோ
டொருபகல் இருந்தால் பின்னர் உடன்கைலை மீள்விர் என்றார்.

வேறு

புன்மனத்தர் பணிந்தேகிப் பூவுலகில் அவதரித்துப்
பொன்வடிவன் சொன்னபடி பூவிருந்த வல்லியினில்
பண்ணிசைகள் பாடிதிரு ஓடுகர மேந்திகயற்
கண்ணியர்கள் வாழ்ந்திடுநற் கடிமனைகள் அடைந்திடுவார்.

இறையவர்தம் திருநாவில் எழுந்தவுரை பிழையாமல்
நறைக்குழலி ஊர்வசியும் நானிலத்தில் தோன்றிவளர்
விரைக்கொடிபோல் மணம்வீசி விமலர்திரு வடிநீழல்
ஒருபொழுதும் மறவாமல் உயிர்வாழ்வார் கணவனுடன்

பனிவரையில் குடியிருக்கும் பரமர்திரு வருளாலோ
துனிவடையும் தொண்டருளம் துயரறுக்கும் கருத்தாலோ
கனியுமுளக் கணவன்உயிர் காலனும்கொண் டேகிடலும்
தனிமனையில் குடியிருந்து தவசியரை நினைந்திடுவார்.

ஏந்திழையார் திருவுள்ளம் இறைவனடி யார்மீது
தாழ்ந்திருந்த ஏதுவினால் தவசியர்கள் வரும்போது,
வீழ்ந்தடிகள் விளக்கிமனை உடனழைத்துக் கொண்டேகி
திந்தமிழின் கவிபோலும் திருவமுது செய்விப்பார்.

உண்டியளித் தடியவரின் உறுபசியைப் போக்கியபின்
தெண்டனிட்டுப் பாயல்விரித் தடிகள்தளி ரால்வருடித்
கண்டங்கறை உண்டவரை உண்ணும்உமை யவள்ஒப்பத்
தொண்டருக்குத் திருமேனித் தியாகமது செய்திடுவார்.

உடலும்சிவம் நுதலும்சிவம் ஒண்கண்சிவம் உன்னுடைய
உடையும்சிவம் உளமும்சிவம் ஒளிஉமிழும் விரல்கள்சிவம்
இடையும்சிவம் இதழும்சிவம் இனியகுழற் கற்றைசிவம்
நடையும்சிவம் எனநவில்வர் நாதர்தொழும் விழித்தொண்டர்.

திருக்கயிலை நீத்துதித்த திருமுனிவர் தமையெல்லாம்
ஒருநாளைக் கொருவரெனும் முறைமையுற உணவளித்துத்
திருமேனித் தியாகமது தினமும்வழு வாதியற்றி
உருவேக திருவேக ஒளியேக உறைந்திடுவார்.

திருமேனித் தியாகியரின் தேகசுகம் கண்டதனால்
வருமுனிவர் குழுவெல்லாம் வளர்சடையர் சிவனார்முன்
அருளியநற் சாபமது நீங்கியகம் மகிழ்ந்துபனி
வரைநாதர் பாதஇணை வந்தேத்திப் பணிந்திட்டார்.

வேறு

இங்ஙனம் தொண்டர்க் கெல்லாம் இன்னுடல் தியாகம் செய்து
நங்கையும் வாழும் போது, நலிவுசெய் தொழுநோய் பற்ற,
செங்கைமான் ஏந்தி யார்தம் திருத்தொண்டர் கண்டு நீங்க
மங்கைதன் விதியை ஓர்ந்து மதியணி பெருமான் உன்னி

இத்தனை நாளாய் நான்உன் இன்னடித் தொண்டர்க் கெல்லாம்
எத்தனை சுகங்கொ டுத்தேன்; எம்பிரான்! இப்போ தென்னை
நத்திடு வார்கள் இங்கே ஒருவரும் இல்லை; ஈதுன்
சத்தியோ அருளோ சற்றும் அறிகிலேன் சாற்றி டாயோ ?

நோயிலா அடியார் என்னை நோக்கிடல் வேண்டேன்; ஆனால்
வாயிலே வெடிப்புத் தோன்றி மேனியில் நீரும் ஊறிச்
சாயுமோர் தொழுநோய் கொண்ட தம்பிரான் தொண்டர்க் கேனும்
ஏயும்என் உடலைத் தியாகம் இயற்றிடல் வேண்டும் என்ன.

அடியவர் குறைகள் எல்லாம் அறிந்துடன் தீர்க்கும் எம்மான்
உடனடி யாக மேனித் தியாகியர்க் குதவ வேண்டித்
திடமுறு உடலின் மீது தீர்வுறுத் தொழுநோய் கொண்டு
நடைவகை பிறழ்ந்து நங்கை நலிமனை நண்ணி வந்தார்.

அம்மையே பிச்சை, ஆண்டான் அடியவன் இவற்குப் பிச்சை,
உம்மையே நம்பி வந்தேன் உடற்பசி பொறுத்தல் ஆற்றேன்,
எம்மைநீர் அருள்பா லித்தே எழுசுவை அமுதம் ஈயென்
றிம்மையே மறுமை யேஎன் றிரண்டிலர் இயம்பிநின்றார்.

தம்பிரான் குரலைக் கேட்டுத் தம்மையே மறந்து நின்ற
வெம்பிய உடலார் மேனித் தியாகியார் வெளியில் வந்து
கும்பிடு பலவும் போட்டுக் குழைந்துணா வூட்டி நாதன்
எம்குடி லுக்கு வந்த தென்தவம் என்றி யம்பி.

கொன்றையின் மலர்மேல் காதல் கொண்டவர் அடிக ளாரே
இன்றுமக் கென்தன் தேகம் தியாகம்நான் செய்தல் வேண்டும்
நன்றென மொழிமின் என்று நற்றவத் தாள்வ ணங்க
குன்றுறை சிவனார் அன்னாள் குறுநகை சொக்கிப் போனார்.

குட்டநோய் கொண்ட ஈசன் கொடியநோய் பிடித் தானை
வட்டமாய் இடையில் கையால் வளைத்தனன் முறுவ லித்தாள்
நிட்டையில் காலம் போக்கும் நிமலனும் இதழ்சு வைக்கக்
குட்டநோய் கொடுநோய் எல்லாம் கூண்டொடு பறந்து போய.

ஊர்வசி மீண்டும் தன்பொன் உருவொடு மகிழ்ந்து நின்றாள்
சீரியன் சிவனும் செம்பொன் திருஉருக் காட்டி அன்னாள்
கோரிய வரங்கள் எல்லாம் குறைவற நல்கிக் காளை
ஊர்ந்தனர் சேர்ந்தார் கைலை உமையவள் புலவி போக்க.

திருமேனித் தியாகி யாரின் திருவருட் புராணம் இஃதை
உருவுசெய் தாரும், அன்னார் உணர்த்திய வழிசென் றாரும்,
உருவமே உலுக்கச் செய்யும் ஒப்பறு தொழுநோய் கண்டு
ஒருபெரும் முத்தி வீட்டில் ஒன்றுவர் சிவத்தி னோடே.

★ ம. ரா. பூபதி M.A. ★

★ "புகையிலை நாயனார் புராணம்" 30-7-1955 "தென்றலில்" வெளியிடப்பட்டது.

சாதலுக்கு அஞ்சா காதற் புலம்பல்!

தமிழ்ப்பித்தன்

வாழ்க்கையிலே மிக மிக இன்றியமையாதது காதல். இந்தக் 'காதல்' எளிதல்ல! ஒரு சிலருக்குக் கிட்டவே கிட்டாது. சிலர் வெறுத்து ஒதுக்குவார்கள்: அவர்களுக்குக் கிட்டும். இப்படி வெவ்வேறு சூழ்நிலையில் இயங்கி வருகிறது இந்தக் 'காதல்'. காதலைப் புகழ்ந்து பாடிய புலவர்கள் பலர்.

புலவர்களும் மக்களும் போற்றிப் புகழும் இக் காதல் உயிரியற்கைதான். ஆனால், காதல் கைகூடுவதற்குள் உடல்தான் கூடாகிவிடுகிறது! அதை நினைக்கும்போது காதல்கொள்வதைவிட, கொள்ளாதிருப்பதே மேல் என்று தோன்றுகிறது. காதலிலே ஏமாற்றமும் எதிர்ப்பும் ஏற்படுவதுண்டு. ஏமாற்றத்தைக் கண்டு,--எதிர்ப்பைக் கண்டு, எடுத்த முயற்சியைச் சிலர் விட்டு விடுவார்கள். சிலர்தான், எத்தனை எதிர்ப்பு கிட்டினாலும் பாதகமில்லை—எடுத்ததை முடிப்போம் என்ற கொள்கையுடையவர்கள்.

இந்த இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் ஒரு தலைவனும் தலைவியும். அவர்கள் ஒருவரை ஒருவர் மிகவும் நேசிக்கின்றனர். வழக்கம் போல, அவர்களது காதலுறவுக்கும் எதிர்ப்பு ஏற்படுகிறது. காதல்தான் மின்னாற்றலாயிற்றே! அதனால் தான், தடை ஏற்பட்டும் கூட அதன் ஒளி அதிகரிக்கிறதேயொழியக் குறையவில்லை. வாழ்க்கையிலே எதிர்ப்பு ஏற்படும் போது மிக்க நெஞ்சுரம் கொண்டு செயலாற்ற வேண்டும் என்பதை இந்தக் காதலர்கள் அறிந்திருக்கிறார்கள்.

காதல் ஆரம்பிக்கிறது. ஆனால் கடமையும் தொடருகிறது. என்னதான் காதல் இருந்தாலும், வாழ்க்கை வசதிக்குப் பொருள் வேண்டுமல்லவா? பொருளிற்குப் பின்னர் தான் இன்பம்! அதை அறிந்திருக்கிறான் இந்தத் தலைவன். அதன் காரணமாக 'திரைகடல் ஓடித் திரவியம் தேட' எண்ணுகிறான்: புறப்படுகிறான். தனது பிரிவைத் தலைவிக்குச் சொல்கிறான். பிரிவு எனும் சொல் கேட்கிறாள் தலைவி. உரமிக்க அவளின் உள்ளம்கூட வாடுகிறது. தன் காதல் கைகூடுவதற்காக தலைவன் பொருள்தேடச் செல்கிறான் என்பதை எண்ணும் போது ஓரளவு திருப்தி ஏற்படுகிறது. 'பெற்றவர் தேடிவைத்த பெருஞ்செல்வம் இருந்தபோதிலும், மற்றும் தேடுதலே மாந்தன் சீர்' என்று மக்கள் நினைக்கும்போது, பெற்றோரையும் உற்றோரையும் எதிர்த்துப் பெருவாழ்வு வாழ எண்ணுகிற தன் தலைவன், பொருளீட்டி வர எண்ணுவது நியாயம்தான் என அவள் எண்ணுகிறாள். என்றாலும் அவள் உள்ளம் கொக்கரிக்கிறது. அதற்கு ஓரளவு தணிவு கூறுகிறாள். தலைவன் வேற்று நாட்டுக்குச் சென்றுவர அனுமதி தந்துவிடுகிறாள். சற்று நேரத்திற்கு முன் கூட, 'செல்லாமையுண்டேல் எனக்குரை' என்று சொன்ன தலைவி, செல்ல அனுமதி அளிக்கும் போது அவன் மகிழாமல் இருப்பானா? மகிழ்ந்து செல்கிறான். ஆனால், சென்ற பின்னர்தான் பிரிவின் பெருந் துன்பத்தை அடைகிறான். எண்ணி வருந்துகிறான். தலைவியும் அப்படித்தான்! ஒருவர் வருந்தி ஒருவர் மகிழ்ந்தால் அது காதலாக முடியாதல்லவா? காதலர் இருவரும் கருத்தொருமித்தனர். அதனால் பிரிவுத் துன்பத்தை உணருகின்றனர். உணர்ந்து பயன் என்ன? இருவரும் இரு திசையில் அல்லவா இருக்கிறார்கள்? தலைவியும் தன்னைப்போல் வாடுவாள் என்று தலைவன் எண்ணலாம். தலைவனும் தன்னைப்போல் வாடுவான் என்று தலைவி எண்ணலாம். அவ்வளவு தான் முடியுமே ஒழிய, 'எண்ணித் துணிந்த கருமத்தை' விட்டு விட முடியாதே!

தலைவன் மெய்வருத்தம் பாராது கருமமே கண்ணாயிருப்பான்: அதற்கு வழியுண்டு! ஆனால் தலைவியின் கதி! தானே எண்ணி எண்ணி ஏங்கிக் கண்ணீர்தான் வடிக்க வேண்டும்! தோழி இருக்கிறாள்! சிற்சில சமயங்களில் ஆறுதல் சொல்வாள். சில சமயங்களில் 'அபாய அறிவிப்புச்' செய்வாள். ஆண், துன்பத்தை அடக்கிக் கொள்வான்; பெண்ணால்தான் அடக்கிக் கொள்ள முடியாது. வெய்து உயிர்ப்பாள்! அழுது தீர்ப்பாள்!

இந்தத் தலைவி அழுகையொடு சற்று ஆத்திரமும் கலந்த முறையில் அரற்றுகிறாள். தலைவன் பிரிந்ததிலிருந்து அவள் விரல் நாளொற்றித் தேய்கிறது. விரல் தேய்ந்ததைப் பற்றிக் கூட அந்த வேல்விழி கவலைப்படவில்லை. தலைவன் பிரிந்ததிலிருந்து அவள் உறக்கமின்றி வாடுகிறாள்--வாடி மெலிகிறாள். மெலிவதைக் கண்டு தன் தாய் கேட்டால் என்ன பதில் சொல்வது என்று திண்டாடுகிறாள்.

'பூ உறங்கின, புள்ளுறங்கின'. ஆனால் இவள் மட்டும் உறங்கவில்லை. தன்னைச் சூழ்ந்தவர்கள்-தாய்-தோழி முதலிய அனைவரும் நிம்மதியாக உறங்குகின்றனர். தான்மட்டும் உறங்கமுடியவில்லை. ஊரே அமைதியாக உறங்குகிறது — இவள்மட்டும் அமைதியற்று வாடுகிறாள். எல்லோரும் சுயநலக்காரர்களாகத் தெரிகிறது இவளின் கண்களுக்கு! தன்னை விட்டு விட்டு எல்லோரும் அமைதியாகத் தூங்குவதைக் காணப் பொறுக்கவில்லை அவளுக்கு! என்ன செய்வதென்றே தோன்றவில்லை. கோபம் வந்தால் என்ன செய்வதென்றே தோன்றாது! அதிலும் பயன் கிட்டாத கோபம் இருந்தால் எவரையும் எதுவும் செய்ய முடியாது! அந்தப் பரிதாப நிலைக்குத் தான் இந்தத் தலைவியும் ஆளாகிறாள். கோபத்தில் அரற்றுகிறாள் இவ்வாறு: "எங்காவது நான் முட்டி, என் மண்டையை உடைத்துக் கொள்ளட்டுமா? எதையாவது, தாக்கட்டுமா? என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லையே! என்னைத் துன்பத்தில் ஆழ்த்தி விட்டு, தாங்கள் மட்டும் நிம்மதியாகத் தூங்கும் இந்த ஊர் மக்களை ஏதேனும் பொய் வார்த்தை சொல்லி எழச் செய்யலாமா? (பாம்பு பாம்பு அல்லது தீ தீ என்று கூவி ஊர் மக்களைத் துயிலிலிருந்து எழுப்பலாம் போல் தோன்றுகிறது) இளந் தென்றல் என் உடலில் வந்து வருத்த அதைக் காணாமல்-என் துயர் நோக்காமல் இருக்கும் இந்த ஊரை நான் என்ன செய்யட்டும்."

முட்டுவேன் கொல்' என்கிறாள். இந்தச் சொல் துயர் மிகுதியால்-ஒன்றும் புரியாத நிலையில் எழுந்துள்ளது. **'உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்'** என அவள் குறிப்பிடும்போது, ஊரின் சுயநலமும் தலைவியின் வருத்தமும் நமக்குப் புலப்படுகிறது. பிரிவினால் பொறுக்க முடியாத துன்பத்தை எய்துகிற தலைவியின் ஆத்திரமும் அழுகையும் கலந்த சொற்களைக் குறுந்தொகையிற் காணலாம். ஔவையார் பாடியதாக இருக்கும் அச்செய்யுள் இது:

முட்டு வேன்கொல்?
தாக்கு வேன்கொல்?

ஓரேன் யானும்
ஓர் பெற்றி மேலிட்டு

ஆஅ ஒல்லெனக்
கூவு வேன்கொல்?

அலமரல் அசைவளி
அலைப்பஎன்

உயவுநோய் அறியாது
துஞ்சும் ஊர்க்கே.

- 28 -

◉◉◉

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

2-வது மாநில மாநாடு

சென்னையில் டிசம்பர் திங்களில் கூடுகிறது

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், புது முறுக்கோடு—மறுமலர்ச்சியுடன் பணியாற்றவேண்டிய கட்டம். அதற்கு வேண்டிய திட்டத்தைத் திறமையோடு தீட்டவும், தியாகத் தீயில் குளிக்கவும் நம்மிடையே உள்ள தீரர்கள் ஏராளம்.

மாணவர் மாநாட்டிற்கு வரவேற்புக் குழு அமைக்கும் வாய்ப்பினை சென்னை திராவிட மாணவர் பெற்றிருக்கின்றனர்.

திராவிட மாணவர் முன்னேற்றக்கழக மாநில மாநாட்டு வரவேற்புக் குழு, சென்னை-இராயபுரம் 'அறிவகத்'தில், 13-11-55 காலை 10-மணிக்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திராவிட மாணவர் முன்னேற்றக்கழகத்தின் பணியில் அக்கரை கொண்டோர்—அன்பு கொண்டோர், அத்தனை மாணவரையும் 13-ந்தேதி காலை 10-மணிக்கு 'அறிவகத்'திற்கு வருகை தருமாறு அன்பு குழைந்து வேண்டிக்கொள்கிறேன்.

எல்லாக் கல்லூரிகள் மட்டுமல்ல — உயர்நிலைப் பள்ளிகள், தொழிற் கல்லூரிகள் (சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் போன்றவைகள்) அனைத்தும் குறைந்தது 2 பிரதிநிதிகளையாவது அனுப்பி, மாணவர் கழகம் வலிவும் பொலிவும் பெற கருத்துக்கள் நல்கி ஒத்துழைக்க அருள் கூர்ந்து வேண்டுகின்றேன்.

13—11—55 ஞாயிறு காலை 10 மணி

'அறிவகம்'—இராயபுரம்—சென்னை

திராவிட மாணவர்கள் நமது விடுதலைப் பட்டாளத்தின் முதல் வரிசையினர்!

அந்தப் பெருமைக்கேற்ற பெற்றி நம்மிடம் உண்டு என்பதை நிரூபிக்கத் தவறாதீர்!

அன்பன்,

கே. ஏ. மதியழகன்

◉◉◉

பன்மொழிப் புலவர். கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி

பதில் தருகிறார்

எஸ். வாதராஜன், காஞ்சி.

'லஞ்சம்' என்ற சொல் வடமொழி. ஆனால் அதற்குத் தமிழிலே தனிச்சொல் உண்டா? இல்லையெனில் லஞ்சம் வாங்கும் பழக்கமும் வடநாட்டிலிருந்து இறக்குமதியானதா?

கைக்கூலி என்ற இரட்டைச் சொல் உண்டு, தனிச்சொல் இல்லை. கைக்கூலி என்பதுகூட லஞ்சம் என்ற அளவு, கீழ்மைப் பொருளுடையதல்ல. நல்ல செயலுக்கே கைக்கூலி கொடுக்கலாம். லஞ்சம் கயமைத்தனமான செயலுக்கே உரியது. அத்தகைய செயல்களும் கருத்துக்களும் பண்டைத்தமிழர் போன்ற நாகரிக சமுதாயத்திற்கு அயலானது. அயல்நாட்டு அயலின அடிமைத்தனத்தின் சின்னமாகவே, சொல்லும் பொருளும் அமைந்துள்ளன.

◉

மாசிலாமணி, சென்னை-5.

பழம்பெரும் தமிழ் நூலான தொல்காப்பியத்திலேயே வடமொழிச்சொற்கள் காணப்படுகின்றனவே, அப்படியாயின் அந்தக் காலத்திலேயே வடமொழி தமிழில் கலந்துவிட்டதா?

வடமொழி என்ற சொல் இக்கேள்வியில் சமஸ்கிருதம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சமஸ்கிருதம், தமிழோடொத்த ஒரு மொழியாக மதிப்புப் பெற்றது சங்க காலத்திற்குப்பின் தான். தமிழைமிட உயர்ந்ததாகத் தவறாகக் கருதப்பட்டு அதன் சொற்கள் தாய்மொழிகளில் இடம் பெற்றது பத்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டேயாகும். இதற்குமுன் வடமொழி என்ற பெயர் சமஸ்கிருதத்தின் தாய்மொழிகளான பாலி, பாகதம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்ட பெயர். சங்க காலத்திற்குப்பின் புத்த சமணரால் அம்மொழிச் சொற்களும் சில தமிழில் இடம்பெற்றன. ஆனால் சங்க காலத்திலோ திருக்குறளிலோ தொல்காப்பியத்திலோ சமஸ்கிருதச் சொற்களே கிடையாது. இப்போது சமஸ்கிருதச் சொற்களென்றும் வடசொற்களென்றும் அவற்றில் காட்டப்படுபவை, உண்மையில் தமிழிலிருந்து நேராகவோ பிற இனமொழிகளின் மூலமாகவோ சமஸ்கிருதம் முதலிய மொழிகளுக்குச் சென்ற சொற்களே.

இவை ஆரியச் சொற்களல்ல என்று காட்டுவது எளிது. அவை தென் ஐரோப்பிய ஆரியமொழிகளான கிரீக், லத்தீனிலோ வட ஐரோப்பிய ஆரியமொழிகளான ஆங்கிலம், ஜெர்மன் ஆகிய மொழிகளிலோ இடம் பெற்றிருக்கமாட்டா.

தொல்காப்பியத்தில் வடசொல் என்று குறித்தது மிகவும் பிற்பட்ட மொழியான சமஸ்கிருதமும் அல்ல. அதற்கு முற்பட்ட பாலி, பாகத மொழிகளுமல்ல. ஏனென்றால் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பவை தொல்காப்பியர் கால முத்தமிழின் நான்குவகைச் சொற்கள் மட்டுமே.

◉

சந்திரன், மதுரை.

வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு பண்டைத் தமிழர்கள் 'திருமணம்' என ஏன் பெயரிட்டிருக்கிறார்கள்?

மணம் மலரை நினைவூட்டுகிறது. மலரின் மணம் பருவத்தால் வரும் புதுமை குறிக்கிறது. தலைமுறை கடந்து தலைமுறையாக இனவாழ்வுக்கு புதுமை புத்தார்வம் தரும் விழாவுக்குத் திருமணம் என்ற தமிழ்ப்பெயரைவிட அறிவார்ந்த, பண்பார்ந்த பெயர் காணமுடியாது. மன்றல், மரு முதலிய பிறதமிழ்ச் சொற்களின் பொருத்தமும் இதுவே.

வெண்பாப் போட்டி 20

'கண்' என்ற சொல் மும்முறை வரும்படி வெண்பா எழுதவும்

முடிவு தேதி 19-11-55.

முகவரி :— வெண்பாப் போட்டி
தென்றல்
சென்னை-6

சிலம்பு வழங்கும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உணர்ச்சியற்ற பகுதிகளை விலக்கி, அதன் உணர்ச்சி வேகத்தை அவர்கள் வளர்த்தனர். அத்துடன் முதலில் உரைநடை பெரிதும் கதை கூறுவதற்கே அமைந்தது. நடிகர் கூற்றின் மூலமே பெரிதும் கதைப் பகுதி விளங்கச் செய்யும் நாடகக் கலைத்திறமை கிரேக்கக் கலைஞருக்கு இருந்தது. தவிர, இன்றியமையா இடங்களில் கதைப்பகுதியை முன்னுரை, முடிவுரை, இடைக்காட்சி ஆகியவைகளாலோ, பின்னணிப் பாட்டாலோ அவர்கள் நிரப்பினர்.

சிலப்பதிகார நாடகப் பண்பு சமஸ்கிருத, கிரேக்க பண்புகளுக்கு மூலமானது. இங்கே உரை நடை கதை நிரப்பும் பகுதிக்கும், உரைச் செய்யுள் அதாவது அகவல் போன்ற இயற்பாக்கள் கதைக்கும் நடிகர் உணர்ச்சிக்கும் உணர்ச்சிமிக்க பகுதிகள் இசைக்குழுவின் இசைப் பாடல்களாகிய வரிப்பாடல்களுக்கும் பயன்படுத்தப்பட்டன.

சிலப்பதிகாரம் ஆங்கில சமஸ்கிருத நாடகங்களின் தற்காலப் பண்புக்கும், கிரேக்க பழங்காலப் பண்புக்கும் முற்பட்ட பழமையுடையதாதலால், அது கிரேக்கரின் கலைநயம் உடைய பழங்காலக் கதைக் கச்சேரிப் பாடலாக, அக்கால வில்லுப் பாட்டுப் பாடலாக இயங்கிற்று. உண்மையில் குறவர்கள் ஆடுவதற் கேற்ற அடிப்படையிலமைந்த ஒரு காட்சியின் கூத்தாகவே அது இளங்கோவடிகளால் இனிது சமைத்து உருவாக்கப்பட்டது என்று காணலாம்.

சமஸ்கிருத நாடகங்களில் 'பெண்களும்' மற்ற 'இழிசனர்களும்' தாய்மொழிகள் அல்லது நாட்டு மொழிகள் பேசினர். இதுவும் ஒரு நல்ல தமிழ்ப் பண்பின் ஆரிய வைதிகத் திரிபே என்பதை சமஸ்கிருத புத்தர் கால நாடகங்கள் காட்டுகின்றன. இவற்றில் உயர்வு தாழ்வு ஆரிய வருணாசிரம, ஆண் பெண் உரு வேறுபாட்டடிப்படையில் அமையவில்லை. ஆண் பெண் அனைவரும் அவரவர் நாகரிகப்படிக்கேற்றபடி உயர் நடையான சமஸ்கிருதமோ நாட்டுப் பேச்சு மொழியோ பேசினர்.

சிலப்பதிகாரத்திலும் சாக்கையர் கூத்திலும் பல்படியான யாப்பு முறைகளாலேயே நடிகர் பண்பும் கதைப் பண்பும் விளக்கப்பட்டன. ஆனால் சமஸ்கிருதம் பின்னாளில் வழங்கப்பட்ட இடத்தில் செந்தமிழும், நாட்டு மொழி வழங்கப்பட்ட இடத்தில் பேச்சுமொழி அதாவது கொடுந்தமிழ் விரவிய செந்தமிழும் வழங்கப்பட்டன.

சிலப்பதிகார நாடக மரபைப் பின்பற்றியே, மாணிக்கவாசகரும் சித்தரும் திசைவழக்கு விரவிப் பாடினர்.

திசை வழக்கு அல்லது பேச்சு வழக்கையே சமஸ்கிருத வாணர் தாய்மொழியாக்கி, அதை நாளடைவில் தம் வருண பேதப் பால் வேறு பாட்டுக் கோட்பாட்டுக்கிணங்க இழிசன வழக்காக்கினர். இதுகாறும் கூறியவற்றால் ஆங்கில சமஸ்கிருதப் பண்புகளுக்கும், கிரேக்க மரபுக்கும் மூலமான மரபே தமிழ்-மலையாள நாடக மரபு என்றும், அதன் பண்பறிந்த பின்னரே சிலப்பதிகார நாடகப் பண்பை உணர முடிகிறது என்றும் கண்டோம்.

மலையாள மரபின் வரலாறு காண்பதன் மூலம் சிலப்பதிகாரத் தமிழ் மரபுடன் கிரேக்க மரபும் சமஸ்கிருத மரபும் கொண்ட தொடர்பு வளர்ச்சி முறைகளை நாம் தெளிவாக உணரலாம்.

(தொடரும்)

சேலத்தில் வெற்றிபெற்றார்கள்!

அண்மையில் தென்னாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்த இந்தியத் துணைக்கண்டப் பிரதமர் நேரு அவர்களுக்கு சேலம் நகராண்மைக் கழகத்தின் சார்பாக ஒரு வரவேற்பு அளிக்க வேண்டுமென்று அக் கழகத்தில் பெருவாரியாக உள்ள காங்கிரஸ் அங்கத்தினர்களால கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை, சுயேச்சை நகரசபை உறுப்பினர்களான திரு. P. K. வரதராஜுலு, டாக்டர் K. R. கோபால், A. மாரியப்பன் ஆகிய மூவரும், கனம் நேரு அவர்கள் திராவிட இயக்கத்தின் செயல்களை "நான்சென்ஸ்" என்று கூறியதற்காக அவருக்கு சேலம் நகராண்மைக் கழகம் வரவேற்பு அளிக்கக் கூடாது என்றுவற்புறுத்திப் பேசி வெளி நடப்புச் செய்தார்கள். இதன் பயனாக பிரதமர் நேரு சேலம் நகராண்மைக் கழகத்தின் வரவேற்பை ஏற்க மாட்டேன் என்றும் தெரிவித்து விட்டார்.

இந்த எதிர்ப்பையும், வெளி நடப்பையும் காரணமாக கொண்டு காங்கிரஸ் இயக்கம் தற்பொழுது நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட அந்தத் தோழர்களின் வார்டுகளில் தீவிரமாக எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார்கள். இந்த எதிர்ப்பை எல்லாம் பொருட்படுத்தாமல், தோழர்கள் திரு. P. K. வரதராஜுலு, டாக்டர் K. R. கோபால், A. மாரியப்பன் ஆகியோரை அந்தந்த வார்டு மக்கள் பெருவாரியான ஓட்டுகள் அளித்து வெற்றி பெறச் செய்தனர்.

நேரு வரவேற்புக்கு நடுநிலைமை வகித்த M. கோபால் அவர்களும் இந்தத் தேர்தலில் பெருவாரியான ஓட்டுகள் பெற்று, முன்னாள் காங்கிரஸ் M. L. A. யான P. கந்தசாமி பிள்ளையைத் தோற்கடித்து வெற்றிபெற்றார்.

வெற்றி பெற்ற சுயேச்சையாளர்கள் :

P. K. வரதராஜுலு, டாக்டர் கே.ஆர். கோபால், பி.கே. மன்னார், A. மாரியப்பன், N. மாரியப்பன், ஓபுளி, D. அப்துல் பார்ஷித், M. கோபால், K. K. ராமதாஸ், K. வரதன், J. S. சுந்தரம், ராஜமாணிக்கம், நல்லப்ப முதலி.

—ந. நி.

வெண்பாப் போட்டி

19. 'கலை' எனத் தொடங்கி 'தலை' என முடித்தல்

வெண்பாப் போட்டி 19ன் பரிசுபெற்ற வெண்பாவையும் பிரசுரத்திற்குத் தகுதியுடைய ஏனைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ கலையின் அரசியே! கன்னித் தமிழே!
அலைகடல் உண்டும் அருகாய்-நிலைபெற்றே
ஆல்போன்றாய்; உன்னை அழிக்க முனைவோருன்
தாள்பணிய வைத்தல் தலை.

—ஆ கோவிந்தராசன், குடந்தை.

★

கலைக்கழகம் கண்டு கருத்துலகின் செம்மை
நிலைக்களனாய் நீண்டநாள் நின்ற-நிலைகுலைந்து
வீழ்ந்த தமிழினத்தை மீண்டும் மிகத்தாழ்த்தித்
தாழ்ந்தவரில் கம்பன் தலை.

—பா. பால்ராசு, காமாட்சிபுரம்.

★

கலையெலா முன்றன் கலையாகக் கொண்டு
நிலையாக நிற்கும் நிதியே!-கொலைசெயும்
வாளரிக்கண் மாதே! வளர்தமிழே! உன்கமலத்
தாள்பணிய வன்றோ தலை.

—பூவை. அ. மணிவாசகன், கிழப்பூங்குடி.

★

கலைத்திடலென்? காங்கிரசைக் காந்தியர்தம் சொல்போல்!
கொலைத்தொழிலாற் கூம்புதலைக் காணீர்!-நிலைத்திடாது!
வீணே அழிதலினும் வேறு நிலையிலதைத்
தாமே கலைத்தல் தலை.

—ந. பிச்சைமுத்து, பாகனேரி.

★

கலையின் உருவே! கவிதைக் கருவே!
அலையாய் சுருண்ட அளகக்-குலைதாங்கில்
தேயாதோ உன்கழுத்து? செந்தமிழே! என்மடியிற்
சாயாயோ சற்றுத் தலை.

இரெ. தங்கையா, பி. ஏ. பெரியநாயக்கன்பாளையம்.

★

கலைமாதைப் போற்றுவதால் கல்லாமை நீங்கா
கலைக்கூடம் தோற்றுவித்துக் கல்லார்-இலையென்று
மங்காப் புகழ்மணக்க மாநிலத்தோர் போற்றவெற்றிச்
சங்கார்ப்பச் செய்தல் தலை.

—க. வி. குருசாமி, சென்னை-12.

★

கலைவாழ் தமிழகத்தின் கன்னல் தமிழைப்
பிழைசொல்லிப் பிடெய்தும் பேதைப்-புலையர்க்கு
செந்தமிழின் சீர்பற்றி தெள்ளியபல் நல்லுரைகள்
தந்திடுதல் தானம் தலை.

—கி. கண்ணன், அகரப்பேட்டை.

★

கலைவிரும்பி கோவலனைக் காதலித்த பெண்ணின்
நிலையெங்கே? உள்ளத்தை நித்தம்-அலைக்கழித்த
கண்ணனைநே சித்தவள் கற்பெங்கே? மாதவியின்
தன்மையே நோக்கின் தலை.

—ஸ்டாலின், அரக்கோணம்.

★

கலையிழந்தோம் மூவேந்தர் கண்டநெறி மாட்சி
நிலையிழந்தோம் ஆரியத்தால் நெஞ்சே-நிலைகுலைந்த
பொன்மொழியைத் தாய்நாட்டை பொய்யறியா [வள்ளுவத்தை
தன்னுயிராய்க் காத்தல் தலை.

வி. ப. கோவிந்தசாமி, சென்னை-12.

கலையின் கருப்பொருளைக் கண்டறியும் சக்தியிலா
புல்லரெலாம் வல்லவரோ பூதலத்தீர்?-நல்லறிஞர்
தம்மை இழித்துரைக்குந் தன்மையராம் அன்னவரே
செம்மையிலார் கட்குத் தலை.

—வஹாப்ஜி, திருப்பூந்துருத்தி.

★

கலைபயிலும் கன்னியவள் கண்ணழகி காந்தச்
சிலையன்னாள் சிங்காரி செல்லும்-நிலையால்
அலைமோதும் எண்ணம் அகந்தன்னில் பார்வை
வலைவீசிச் சாய்ப்பாள் தலை.

—அமுதன், சிக்கருயபுரம்.

★

கலைமதியே! நீஏன் கதிரொளியால் என்னைக்
குலைக்கத் துணிந்தாய்? குணஞ்சேர்-தலைவரிடம்
இக்கணம்நீ சென்றே "இறக்கின்றாள்; போ" என்று
தக்கமுறை கூறல் தலை.

வித்துவான் ச. சுந்தரேசன், நோனூர்.

★

கலையெழிலும் செஞ்சொற் கவியெழிலும் நெஞ்சில்
அலையெழுப்பும் யாவும் அமையும்-நிலைபெற்ற
எங்கள் தமிழன்றி எம்மவர்க்கு இன்னுயிரோ
தங்கம்? தமிழே தலை.

—எஸ். வி. வி. ராமன், குருசாமிபாளையம்.

★

கலையருவி பாய்ந்தொழுகும் கன்னற் றமிழில்
நிலவுபோல் நின்றொளிர் தென்றல்-நல்விதழே!
பார்புகழும் பைந்தமிழிற் பாமலராய் நீவந்து
தீர்ப்பாயோ வென்கா தலை.

—கவிதையன்பன், திருச்சி.

★

கலைசொட்டுங் கன்னித் தமிழ்நாட்டின் மாண்பு
நிலைகெட்டுப் போச்சுநடா நெஞ்சங்-குலைந்திடுதே
எட்டிப்பா ரங்கே யினத்தானை யெச்சியிலைத்
தொட்டியிலே மோது தலை.

—ஆரை. நா. கணபதி.

★

கலையழகு மின்னுமிளங் கன்னித் தமிழ்த்தாய்
தலைகுனிந்து கோலிழந்து தாழ்ந்த-நிலையில்
தமிழ்க்கெதிராய் இந்தி தலைதூக்கும் போழ்தில்
தமிழ்காக்கும் போரே தலை.

நர்மதா அமரன், வேலூர்.

★

கலைநிறைந்த பொன்னின்சொற் காவியநன் னூற்கள்
விலைமதியாப் பாவினங்கள் மேவும்-நிலையார்ந்த
துங்கமுற் றெம்மொழிக்கும் தோலாத மாணிக்கத்
தங்கத் தமிழே தலை.

—பரவையான், கோட்டைத்துறை.

★

கலைகள் முழுதுடைநற் கன்னித் தமிழ்த்தாய்
உலைவின்றி மீண்டும் உயர்ந்தே-விலையில்
மணிமகுட மேற்றென்றும் மாற்றார் பணியத்
தனியரசு கொள்ளல் தலை.

—இராம. மாணிக்கம், நெற்குப்பை.

★

கலையென்று காமப் புராணக் கதையை
விலைகூறி நின்றாரை வீழ்த்தி-நிலைமாற்றி
எங்கும் புகழ்பெற்ற எங்களண்ணா, மாவீரம்
தங்கியோருள் எல்லாம் தலை.

—சு. சந்தானக் கண்ணன், மதுரை.

★

கலையாக நெஞ்சக் கரவெண்ணி யுண்மை
நிலைமறைத்து நேசத் தொடர்பைக்-குலைத்துவரும்
குத்தூசி தந்தை பெரியாரைக் கவ்வியுள்ள
தொத்துநோய்க் கெல்லாம் தலை.

—முருகு. வரகூர்.

★

கலைந்ததுவோ உன்வாழ்வு? காரிகைநீ எண்ணின்
கலையாத நல்வாழ்வு காண்பாய்-சிலையழகே!
கொண்டான் இறந்துவிட்டால் குற்றமென்ன நீமணத்தல்?
தண்டுவாரைக் கொய்வேன் தலை,

—ஆசிரியர், சவ்வாது, கயற்கண்ணிபுரம்.

◉ பரிசு பெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.